
# விழுதுகள்



# தேயிலை தோட்டத்திலே .....

புழுதிப் படுக்கையில்
புதைந்த என் மக்களை
போற்றும் இரங்கல்
புகழ் மொழி இல்லை.

பழுதிலா அவர்க்கோர்
கல்லறை இல்லை
புரிந்திலார் நினைவு நாள்
பகருவார் இல்லை.

ஊனையும் உடலையும்
ஊட்டி இம்மண்ணை
உயிர்த்தவர்க்கு இங்கே
உளங்கசித் தன்பும்
பூ ஞுவாரில்லை அவர்
புதை மேட்டிலோர் கானகப்
பூ வைப் பறித்துப்
போடுவாரில்லை.

ஆழப் புதைந்த
தேயிலை செடியில்
அடியிற் புதைந்த
அப்பனின் சிதைமேல்
ஏழை மகனும்
ஏறி மிதித்து
இங்கெவர் வாழவோ
தன்னுயிர் தருவன்

என்னே மனிதர்
இவரே இறந்தார்க்கு
இங்கோர் கல்லறை
எடுத்திலர்! வெட்கம்

தன்னை மறைக்கத்
தானோ அவ்விறைவனும்
தளிர் பசும் புல்லால்
தரை பிறந்தானோ.!

மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளை

ஆசிரியர்
ஆறுமுகத்திற்காக
அன்புடன்,

[illegible]
16/03/2003
6.46 am.

# விழுதுகள்

சங்கத் தமிழ் மன்றம்
லோயல் கல்வியகம்
ஹட்டன்

| | |
|---|---|
| **Published :** | *March 2003.* |
| **Publishers :** | *Sanga Thamil Mandram<br>217, Dimbulla Road,<br>Loyal Academy,<br>Hatton,<br>Sri Lanka.* |
| **Phone :** | *051-23575<br>071-283166* |
| **E-mail :** | *loyalcs@sltnet.lk* |
| © : | *Sanga Thamil Mandram* |
| **Editorial Board :** | *K.Vinayagamoorthy<br>N.Satheeswaran<br>F.DominianMark* |
| **Loyout<br>Illustration<br>Cover Design :** | *S.Leo Jebarajah* |
| **Consultation :** | *K.Nadaraj<br>Thinagaran* |
| **Type Setting :** | *R.Prabakar<br>M.I.Nizamdeen* |
| **Printers :** | *Loyal Offset<br>217, Dimbulla Road,<br>Loyal Academy,<br>Hatton.* |

உள்ளே


| | | | |
|---|---|---|---|
| 01. | அட்டைப்பட விளக்கம் | ஆசிரியர் குழு | |
| 02. | நிகழ்ச்சி நிரல் | ஏற்பாட்டுக் குழு | 06 |
| 03. | என்னுரையாக... | க. விநாயகமூர்த்தி | 07 |
| 04. | இஸ்தாபகரின் ஆசிச்செய்தி | பொ. சிங்கரட்ணம் | 10 |
| 05. | இயக்குனர் வாழ்த்துகின்றார் | சு. சாரங்கன் | 11 |
| 06. | ஒரு தசாப்தம் என்பது | ம. திலகராஜா | 12 |
| 07. | தலைவரிடமிருந்து | செ. செல்வகுமார் | 13 |
| 08. | இதழாசிரியர் இதயத்திலிருந்து | ஆ. சிவகுமார் | 14 |
| 09. | கலைத்துறை வளர்ச்சியில் | இரா. மகேந்திரன் | 15 |
| 10. | ஆயிரத்தில் ஒருவன் | ச. வில்சன் | 16 |
| 11. | கல்வெட்டு | க. கருணாநிதி | 17 |
| 12. | ஆணிவேர் | த. கனகராஜ் | 18 |
| 13. | விழுதின் விழுதுகள் | சி. பிரஷாந்தினி | 20 |
| 14. | சில வார்த்தைகள் | பி. டொமினியன்மார்க் | 21 |
| 15. | நினைத்திடு மனமே | ரா. யோகசக்தியம்மா | 22 |
| 16. | கரையேற்றிய பொக்கிசங்கள் | பூ. உமாச்சந்திரன் | 23 |
| 17. | வளர்க உன் பணி | செ. அருள்வாணி | 24 |
| 18. | தொடரட்டும் இந்த பொற்காலம் | ரா. தனபதி | 25 |
| 20. | சங்கத் தமிழ் மன்ற குலாம் | | 27 |
| 21. | விருது பெறுவோர் விபரங்கள் | | 28 |
| 22. | மலையக வாய்மொழி பாடல்கள் (கட்டுரை) | க. சுகுனா | 29 |
| 23. | கல்வியக கலைப்பிரிவு ஆசிரியர்கள் | | 32 |
| 24. | ஒளி பிறந்தது (சிறுகதை) | சி. புஸ்பராஜ் | 33 |
| 25. | கலைப் பிரிவிலிருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியோர் | | 36 |
| 26. | யுத்தம் மாற யுகம் மாற..... (கவிதை) | சி. கவிதா | 37 |
| 27. | விசேட சித்திக்குரியவர்கள்/அதிகூடிய புள்ளிக்குரியவர்கள் | | 39 |
| 28. | முகவரிகள் (2003ம் கல்வியாண்டு) | | 40 |
| 29.. | முகவரிகள் (2002ம் மீட்டல் வகுப்பு) | | 43 |
| 30. | முகவரிகள் (2004ம் கல்வியாண்டு) | | 44 |
| 31. | என்றென்றும் நன்றியுடன் | நா. சதீஸ்வரன் | 49 |

**என்றும் ........**
**ஆசிரியத்துவமிக்க**
**ஆசிரியர்களாகவும்,**
**மாண்புமிகு**
**மாணவர்களாகவும்**
**வாழ்ந்த,**
**வாழ்ந்துக்கொண்டிருக்கின்ற**
**மாணவ, ஆசியர்களுக்கு**
**சமர்ப்பணம்.**

*அட்டைப்படம் ......*

எழுதுகோலுடன் ஆரம்பம்
எம் பள்ளி வாழ்க்கை
புத்தகங்கள், கரும்பலகைகள்
உயிர் மூச்சாய்
உடன் வர ......
உயர்வு பெற்றோர் - இன்று
விழுதுகளாய் .........

# நூல் வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

களம் : நு/ஹ/ நோர்வூட் த.ம.வி.

காலம் : காலை 9.30 மணி

தலைமை : க. விநாயகமூர்த்தி

| | |
|---|---|
| 01. தமிழ் மொழி வாழ்த்து | |
| 02. குத்துவிளக்கேற்றல் | |
| 03. வரவேற்புரை | திரு. ச. வில்சன் |
| 04. தலைமையுரை | திரு. க. விநாயகமூர்த்தி |
| 05. பாடல் (2003) | செல்வன் வி. கலைச்செல்வன் |
| 06. நூல் வெளியீடு | செல்வன். சிவகுமார் (இதழாசிரியர்) |
| 07. நூல் விமர்சனம் | திரு. க. நடராஜ |
| 08. கவிதை (2004) | செல்வன். க. சோபனராஜா |
| 09. பாடல் (2004) | செல்வன். பி. முத்துக்குமார் |
| 10. பேச்சு (2004) | செல்வன். பி. கருணாகரன் |
| 11. இதழ் வழங்கல் | |
| 12. போட்டிக்கு வந்த கட்டுரைகள் | ஒரு பார்வை (திரு ...,ல்நாடன்) |
| 13. விருது வழங்கல் | |
| 14. ஆசிரியர் சார்புரை | திரு. பி. டொமினியன் மார்க் |
| 15. பேச்சு (2003) | செல்வன். ரா. பிரதீப் |
| 16. பாடல் (2003) | செல்வி. வ. வசந்தராணி |
| 17. போட்டிக்கு வந்த சிறுகதைகள் | ஒரு பார்வை (திரு. மொழிவாதன்) |
| 18. விருது வழங்கல் | |
| 19. விவாதம் | 2003 ம் ஆண்டு மாணவர்கள் |
| 20. கவிதை (2003) | செல்வி. சு. தர்ஷினி |
| 21. போட்டிக்கு வந்த கவிதைகள் | ஒரு பார்வை (திரு. மல்லிகை சி.குமார்) |
| 22. விருது வழங்கல் | |
| 23. பல்குரல் கதம்ப நிகழ்ச்சி | செல்வன். வ. கார்த்திக், கணேஷ் குழு |
| 24. விருது வழங்கல் | |
| 25. நன்றியுரை | திரு. நா. சதீஸ்வரன் |

*நிகழ்ச்சித் தொகுப்பும் நடாத்துகையும்*
*திரு. ச. வில்சன்*
*திரு. பி. டொமினியன் மார்க்.*

# என்னுரையாக.....

லோயல் கல்வியகத்தின் கலைத்துறை மாணவர்களது அறுவடையாக இவ் "விழுதுகள்" மலர்கின்றது. இதில் பொறுப்பாசிரியர் என்ற வகையில் பொறுப்போடு சில கருத்துக்களை பரிமாறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் குறிப்பாக கல்வி மட்டத்தில் இலங்கை ஆரோக்கியமான ஒரு வளர்ச்சியை அடைந்திருக்கின்றதென்பது யாவரும் அறிந்த உண்மையே.

இக்கல்வித்துறை அபிவிருத்தி பொதுவாக இலங்கையின் தேசிய அபிவிருத்தியை குறிக்கின்றதே அன்றி ஒட்டுமொத்த பிரதேசத்தின் அபிவிருத்தியென கூற முடியாது. இலங்கையின் சில பிரதேசங்கள் கல்வியில் இன்னும் பின்னடைந்த நிலையிலேயே இருந்து வருகின்றமை கசப்பான உண்மையாகும்.

இதற்கு அன்று முதல் இன்றுவரை விதியாக இருந்து வருவது மலையகம்தான். காலனித்துவத்திலிருந்து இன்றைய கணினி யுகம்வரை மலையகத்தின் கல்வித்துறை பெரிதளவிலான மாற்றம் அடைந்திருப்பதாக அறிய முடியவில்லை.

எப்படியோ, 1996களின் பின்னர் மலையகத்தின் கல்வியில் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றமை மனங்கொள்ளத்தக்கது. மலையகத்தின் இத்தசாப்தகால கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு ஹட்டன் பிரதேசத்தில் உண்டு எனலாம்.

இக்காலப்பகுதியில் மலையகத்தில் குறிப்பாக ஹட்டன் பிரதேசத்தில் விஞ்ஞானம், வர்த்தகம் துறையில் ஏற்பட்ட வளர்ச்சிப்போக்கு ஏனோ கலைத்துறையில் மட்டும் மந்த கதியிலேயே இருந்து வருகின்றது.

மலையகத்தின் நீண்ட கல்வி பாரம்பரியம் கலைத்துறையிலேயே ஏற்பட்டிருந்தபோதும் கூட ஏனைய இரு துறைகளில் ஏற்பட்ட துரித ஒரு வளர்ச்சிக்கு கலைத்துறை தன்னை ஈடுகொடுக்க முடியாமல் போய்விட்டமை கவலைக்குரியதே.

எது எப்படியோ துரித வளர்ச்சியை கலைத்துறையில் ஏற்படுத்த முடியாமல் போனாலும் கூட வழமையான போக்கினையாவது தக்கவைத்து வருகின்றமை ஒருவகையில் ஆறுதலையே தருகின்றது.

1990 களின் பின்னர் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் கலைத்துறையில் ஹட்டன் பிரதேசத்தில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு பாடசாலைகளுடன் தனியார் கல்வி நிறுவனங்களும் கணிசமான பங்களிப்பினை வழங்கி வருகின்ற உண்மையை ஒரு நிலையோடு சிந்திக்கின்ற யாராலும் மறுக்க முடியாது.

இப்பங்களிப்பில் "லோயல் கல்வியகத்திற்கு" குறிப்பிடத்தக்கவோர் இடம் இருக்கின் றதென்பதை மனமுவந்து கூறலாம்.

இக்கல்வியகத்தில் ஏறத்தாழ ஆறு வருடங்கள் கலைத்துறைக்கு ஆசிரியனாக இருந்து வருகின்றவன் என்ற வகையில் மலையகத்தின் கல்வி வளர்ச்சிக்கு குறிப்பாக கலைத்துறையின் பங்களிப்புக்கு எங்களால் என்ன செய்ய முடிந்தது என்பதை சற்று சிந்தித்து பார்க்க வேண்டிய தேவை எற்பட்டது.

இதற்கு உசாத்துணையாக லோயலுக்கும் எனக்குமிடையே உறவுகளையும் பரிமாறிக்கொள்வது பயன்மிக்கதாக அமையும் என நம்புகின்றேன்.

1994களில் நான் எனது உயர்தர கல்வியை தொடர்கையில் "பொருளியல்" பாடத்திற்கு பொருத்தமான இடத்தை தேட முயல்கையில்தான் "திரு. சிங்கரட்ணம்" எனும் உயர்ந்த மனிதர் எமக்கு அறிமுகமாகினார். உண்மையில் நானும் என்போல் பலரும் லோயலுக்கு வரவே காரணமாயிருந்த பெருமை இப்பெருந்தகைக்குத்தான் சாரும். எனக்கு ஆசிரியனாக இருந்து எனது சக ஆசிரியராகவும் இருந்து வரும் அவரது பெருந்தன்மையை எங்களால் போற்றாமல் இருக்க முடியவில்லை. இந்த வகையில் இவ்வாசிரியரின் ஆசியுரையை பெரும்பேராகவே நாம் கருதுகின்றோம்.

ஒரு மாணவனாக லோயலை நாடி வந்த என்னை ஆசிரியனாக்கிய பெருமை இக்கல்வி யகத்தின் முன்னாள் இயக்குனரும் எனது ஆசிரியருமான திரு. ம. திலகராஜாவையே சாரும். அதற்காக நான் அவருக்கு என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

இக்கல்வியகத்தில் நீண்டகால ஆசிரியராக இருந்து இன்றுவரை கல்வியகத்திற்காக அல்லும் பகலும் உழைத்துவரும் ஆசிரியர் திரு. சாரங்கனின் சேவையையும் எங்களால் மறுக்க முடியாது.

எமது கல்வியகத்தின் வரலாற்றினையும், சாதனைகளையும் சான்று பகிருகின்ற இதழாக "சுவாதி" ஏலவே வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் கலைத்துறையின் வரலாற்றையும் சாதனைகளையும் ஆராய வேண்டிய தேவை எம்மை ஆற்றுப்படுதியது. அதனை ஆவணப்படுத்தும் முயற்சியின் வெளிப்பாடே "விழுதுகள்" ஆகும்.

"விழுதுகள்" முழுக்க முழுக்க மாணவர்களது முயற்சியாகவே அமைய வேண்டும் என்ற ஆதங்கத்தினால் அமைக்கப்பட்ட களமே "சங்கத்தமிழ் மன்றம்" ஆகும்.

சங்கத்தமிழ் மன்றத்தின் முதல் மலராக "விழுதுகள்" மலர்வது மனங்கொள்ளத்தக்கது.

ஏறத்தாழ பன்னிரெண்டு வருடகால கல்வியக வரலாற்றில் சுமார் ஆறுவருடகால வரலாறே கலைத்துறைக்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆறு வருடகால எமது அறுவடை "விழுதுகள்" மூலம் வெளிப்பட்டுள்ளது. இவ் "விழுதுகள்" எதிர்கால விருட்சங்களாக வேண்டுமென்ற எமது விருப்பங்களும் கருத்துக்களும் எழுத்துக்களாக உருப்பெற்றுள்ளது.

சுமார் 1996 முதல் இன்று வரை எம்மிடம் கற்ற, கற்றுக்கொண்டிருக்கின்றவர்களது கருத்துக்கள் இதழை அழகு பெறச் செய்துள்ளது. ஒவ்வொரு கல்வியாண்டு மாணவர்கள் சார்பாக ஒவ்வொருவரது கருத்துரைகளும் அக்கல்வியாண்டின் பின்னணியாக அமைய வேண்டுமென ஆசைப்பட்டோம்.

இது எமது அமைப்பை பற்றிய வாழ்த்துரையாகவோ, தனிமனித புராணமாகவோ இருக்கக் கூடாது என்பதில் நான் இறுக்கமாக இருந்தேன். ஆயின் அதனை மீறி எங்களது இறுக்கம் உடைக்கப்பட்டமையை எங்களால் விலக்க முடியாமல் போய் விட்டது.

ஆயின் ஏதோ ஒரு வகையில் ஒவ்வொரு கல்வியாண்டினது கால பின்னணி கருத்துரைக்கப் பட்டுள்ளமையை கவனத்தில் கொள்ளவேண்டுமென ஆசைப்படுகின்றேன்.

நிகழ்கால மாணவர்கள் எவருமே ஏட்டுக் கல்வியில் மட்டுமே முடங்கிவிடக் கூடாது, என்பதற்காக சில போட்டிகளும் நடாத்தப்பட்டன. இப்போட்டிகள் தலைப்பு முதல் திருத்தம் வரை மலையகத்தின் முக்கிய இலக்கிய கர்த்தாக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டதில் எமக்கு மகிழ்ச்சியே.

அப்போட்டிகளது முடிவுகளையும், முதலிட ஆக்கங்களையும் "விழுதுகள்" சுமந்து வந்துள்ளது.

கலைத்துறையில் முக்கிய இரு பாடங்களான தமிழ், அரசறிவியல் பாடங்களில் அதிவிசேட சித்தி (A) பெறுவது ஒரு சிம்ம சொப்பனமாக இருந்த காலம் இருந்ததென்பது என்னவோ உண்மையே. அக்கருத்தினை எங்களால் மாற்றியமைக்க முடிந்தமையை இங்கு குறித்து காட்டியுள்ளோம்.

இவ்விரு பாடங்களின் துணையுடன் பல்கலைக்கழகம் தெரிவானவர்களது விபரங்கள் விழுதுகளுக்கு அணிசேர்த்துள்ளது. தவிர அவர்களை கௌரவிக்கும் விழாவையும் எமது தமிழ்ச் சங்கம் நடாத்த திட்டமிட்டுள்ளது.

இம்முயற்சிகளெல்லாம் தனிமனித சொத்திற்குட்பட்டதல்ல என்பதினை நிருபிப்பதற்கா எம்மோடு துணை நின்ற ஆசிரியர்களது விபரங்களையும் தரவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

"விழுதுகள்" மாணவர்களது ஒட்டுமொத்த அறுவடையாக அமைய வேண்டும் என்ற ஆதங்கத்தினால் அனுசரணையாக இருந்த 2003ம், 2004ம் கல்வியாண்டு மாணவர்களுடன் மீட்டல் வகுப்பு மாணவர்களது விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கெல்லாம் களமாக விளங்கிய சங்கத்தமிழ் மன்ற உறுப்பமைவும் உருப்பெற்றுள்ளது. தவிர சமகால மாணவர்களில் பாட ரீதியில் சிறந்த மாணவர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளனர். எனவே நிகழ்ச்சி நிரலையும் இதழ் தாங்கி வந்துள்ளது.

மொத்தத்தில் மலையகத்தின் சமூக விடுதலைக்கான சாவி கல்வியே என்பதில் இருவேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது.

ஆசிரியத்துவமிக்க ஆசியர்களையும் அவர்களால் மாண்புமிக மாணவர்களையும் உருவாக்க முடியாத கல்வி திட்டத்திற்கு மத்தியில் ஒரு புதிய கல்வி கலாசாரத்தை ஆரம்பித்து வைத்துள்ளோம் என்ற நம்பிக்கை நிறையவே எமக்குண்டு.

இவ்வாறான புதிய கல்வி கலாசாரம்தான் மலையத்தினது முழுமையான விடுதலைக்கு மூலமாக அமைய முடியும், என்ற நம்பிக்கையில் எமது முயற்சி தொடர்கின்றது.

படிப்பு பார்ட்சைக்காக மட்டுமன்றி பகுத்தறிவாக, படிப்பினையாக, பயனுள்ள தத்துவமாக பயன்பெற வேண்டுமென்பதே எமது கற்பித்தலின் தாரக மந்திரமாக இருந்து வந்துள்ளது.

நேற்றைய அஸ்த்தனம் எப்படியாகவும் இருந்திருக்கலாம். நாளைய விடியல் நம்பிக்கைக்கு ரியதாகவும் நமக்குரியதாகவும் அமைவதற்கு ஒரேயொரு ஆயுதம் கல்வியே... கல்வியே. என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகின்றேன்.

*என்றும் அன்புடன்*
*க. விநாயகமூர்த்தி*
*(பொறுப்பாசிரியர்)*

# இஸ்தாபகரின் ஆசிச்செய்தி

ஹட்டன் லோயல் கல்வியகத்தின் கலைப்பிரிவினது "சங்கத் தமிழ் மன்றத்தின்" பரிசளிப்பு விழாவையும் "விழுதுகள்" நூல் வெளியீட்டு விழாவையும் முன்னிட்டு எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

லோயல் கல்வியகத்தின் முன்னணி ஆசிரியரும் சட்டத்தரணியுமான திரு. க. விநாயகமூர்த்தி அவர்களின் முயற்சி வழிகாட்டலின் கீழும் அவரின் வழிவந்த ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து மேற்கொள்கின்றனர். இந்த முயற்சியானது புதிய உலகப் போக்கையும் தமிழ் இனத்தின் குறிப்பாக இலங்கை வாழ் மலையக தமிழ் சங்கத்தின் முன்னேற்றத்தையும் மையமாகக் கொண்டு காலத்தின் தேவையை அறிந்து மேற்கொள்ளப்படும் முயற்சியாகும் என்பதில் ஐயம் எதுவும் கிடையாது.

சுதந்திரத்தை தொடர்ந்து ஏறத்தாழ கடந்த ஐந்து தசாப்தங்களாக புரையோடி வந்த ஏட்டுக் கல்வி முறையானது மாணவர்களையும், மக்களையும் அகன்ற நோக்கில் சிந்தித்து ஆற்றல்களை வெளிப்படுத்தும் அருமை வளர்ச்சியை ஏற்படுத்தவும் தவிற விட்டது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். பரீட்சையில் சித்தியடைவதையும் சான்றிதழ்களை பெறுவதையுமே நோக்காகக் கொண்டு பாடசாலைகளிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் செயற்பட்டு வருகின்றனர்.

மாணவர்களிடையே அறிவு வளர்ச்சி சமூக உளவியக்க திறன்களையும் அத்தோடு தொடர்புடைய ஆளுமைகளையும் வளர்த்து சமநிலை ஆளுமை வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக கல்வி சிந்தனைகளையும் கல்வி தத்துவத்தாலும் மாற்றத்தை புகுத்தும் நோக்கில் இலங்கை உட்பட பல மூன்றாம் உலக நாடுகளில் கல்வி சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதை அறிகின்றோம்.

இந்த பின்னணியிலே ஹட்டன், லோயல் கல்வியக முதன்மை ஆசிரியர் திரு.க.விநாயகமூர்த்தியினால் வழிநடாத்தப்படும் "சங்கத் தமிழ் மன்றத்தின்" செயற்பாடுகளை பார்க்க வேண்டும். பரீட்சை மைய கல்விக்கு அப்பாலும் சென்று அவரது மாணவர்களிடம் மறைந்து காணப்படும் ஆளுமைகளை வெளிக்கொண்டு வந்தததிற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த முழுமையான சமநிலை ஆளுமை மிக்கவர்களான உருவாவதற்கான இந்த முயற்சியானது பாராட்டத் தக்கதாகவும், மலையக தனியார் கல்வி நிறுவனங்களுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

லோயல் கல்வியக கலைத்துறை மாணவர்களது கன்னி முயற்சியானது மலையக தமிழ் மாணவர்களை ஒருங்கிணைத்து மலையகமெங்கும் பரவி விரிவடைய வேண்டும். இந்த மாற்றத்தோடு தொடர்புடைய அனைத்து தரப்பினரும் உழைக்க வேண்டும். மலையக மக்களின் முன்னேற்றத்தில் அக்கறையுடையோர் இந்த சங்கத்தின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

லோயல் கல்வியக "சங்கத் தமிழ் மன்றத்தின்" விழுதுகள் சஞ்சிகை போல இன்னும் பல சஞ்சிகைகள் வெளிவர வேண்டும். மலையக மாணவர்களது திறமைகளை வெளிக்காட்டுவதற்காக இன்னும் பல சந்தர்ப்பங்களை இச்சங்கம் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். மங்காது தொடர்ந்து சங்கம் வளர வேண்டும். ஆதற்காக ஆசிகளையும் வாழ்த்துகளையும் வழங்கி விடைப்பெறுகின்றேன்.

*பொ. சிங்கரட்ணம்.*
விரிவுரையாளர்.
ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி,
பத்தனை.

# இயக்குனர் வாழ்த்துகின்றார்.

லோயல் கல்வியகத்தின் வரலாற்றில் கலைத்துறை மாணவர்களது "விழுதுகள்" நூல் வெளியீட்டில் என்னுடைய கருத்துரையும் இடம் பெறுவதை முன்னிட்டு மகிழ்வடைகின்றேன்.

இந்நூல் வெளியீட்டு விழாவானது முழுமையாக கலைத்துறை மாணவர்களது ஆளுமைகளை வெளிப்படுத்துவதாக நான் இனங்காணுகின்றேன். இந்த கல்வியத்துக்கு தன்னை முழுமையாக அர்ப்பணம் செய்து மலையக வரலாற்றில் பல மாணவர்களை பல மட்டங்களில் உருவாக்கிய ஆசிரியர் க.விநாயகமூர்த்தி அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த கல்வியகம் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றைக் கொண்டுள்ளது. இதன் பத்தாண்டு நிறைவினை ஒட்டி ஏலவே "சுவாதி" என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த "விழுதுகள்" நூல் வெளியீடானது கலைத் துறையின் ஒட்டு மொத்தமான சாதனைகளை சான்றுபகர்வதாக இருப்பது மகிழ்வடைய வேண்டிய ஒன்றாகும்.

மாணவர்கள், ஆசிரியர்களின் எழுத்துக்களை சுமந்து வரும் இந்நூலானது மாணவர்களது தேடல் முயற்சிகளையும், எழுத்தாற்றல்களையும் விருத்தி செய்ய உதவுகின்றது. இவ் "விழுதுகள்" நூலை வெளியிட முயற்சித்த லோயல் கல்விக கலைத்துறை ஆசிரியர்களையும் மாணவர்களையும் மனதார வாழ்த்துகின்றேன்..

இக் கல்வியகத்தின் "சங்கத் தமிழ் மன்றத்தின்" பணிகளை எடுத்துக் காட்டும் முயற்சியாக இருக்கும் இந்நூல் வெளியீடு எதிர்காலத்தில் மேலும் வளர்ச்சியடைந்து சிறந்த ஆக்கங்களை தாங்கி வர வாழ்த்துகின்றேன்.

S. சாரங்கன்.
இயக்குனர்.
லோயல் கல்வியகம்,
ஹட்டன்.

# ஒரு தசாப்தம் என்பது.........

"லோயல்" என்ற பெயரில்லாத "வளவ்வ" வகுப்பறையில் கணிசமான அறிவு பெற்று 1993ல் நான் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றினேன். என் ஆசான் திரு.சிங்கரட்ணம் அவர்கள் வணிகப்பிரிவிற்கும் ஆசிரியர் திரு.நாகரட்ணம் அவர்கள் விஞ்ஞானத்துறைக்கும் கற்பித்தனர். 1993 நவம்பரில் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு பெறாத நிலையிலும் நம்பிக்கை மிகுதியில் ஆசிரியர் சிங்கரட்ணம் அவர்களின் பதில் கடமைகளை நிறைவேற்றவென லோயல் என பெயர் பெற்ற "வளவ்வ" வகுப்பறையில் ஆசிரியராக சேர்ந்தேன்.

93/94 மற்றும் 94/95 கல்வியாண்டு மாணவர்களுக்கு பொருளியல், புவியியல் பாடங்களைக் கற்பிக்க ஆரம்பித்தேன். 94/95 பொருளியல் வகுப்பில் ஒரு மாணவனின் ஆர்வ மிகுதி அதிகமாகவிருந்தது. விசாரித்துப் பார்த்தேன், உதவி வேண்டப்பட்டவராக இருந்தார். லோயல் வளாகத்திலேயே அமைந்திருந்த எனது தங்குமறையில் அவரையும் ஒரு உறுப்பினராக்கிக் கொண்டேன். நேரம் கிடைக்கும் போதெல்லாம் இலக்கிய விடயங்களை கலந்துரையாடுவோம். பிரத்தியேகமான முறையில் எனக்கு நெருங்கிய தொடர்புடைய ஆசிரியர்கள், பல்கலைக்கழக நண்பர்களை வரவழைத்து தமிழ்,. அரசறிவியல் பாடங்களை குறிப்பிட்ட மாணவருக்கு போதிய உதவிகள் பெற ஏற்பாடு செய்தேன்.

அவரது பரீட்சையை 1995 ஆகஸ்டில் முடித்தவுடன் அவரை லோயல் கல்வியகத்தின் தமிழ் ஆசிரியராக்கினேன். (அப்போது நான் கல்வியக நிர்வாகியாகவும் ஆக்கப்பட்டு வேறு நண்பர்களையும் ஆசியராக்கியுமிருந்தேன்). அப்போது தலவாக்கலை "விக்டரி" கல்வி நிலையத்தில் நான் புவியியல் ஆசிரியராக பணியாற்றியதோடு அதனால் அதன் இயக்குனர் ஆசிரியர் திரு.குலசேகரம் அவர்களுடனான தொடர்பினால் குறிப்பிட்ட மாணவரை தலவாக்கலையிலும் உயர்தர தமிழ் பாடம் கற்பிப்பதற்கு அறிமுகம் செய்தேன்.

2001 ஆம் ஆண்டு லோயலில் எனது சேவைக் காலத்தை முடித்துக்கொண்டு தலைநகரில் முகாமைத்துவ துறையில் தற்போது தொழில் செய்து கொண்டிருக்கின்றேன். லோயலின் கலைத்துறையில் பெயர்பெற்ற தமிழாசிரியராக விளங்கும் அந்த மாணவன் தனது மாணவர்களுடன் இணைந்து தனது ஆசிரியப் பணியின் பதிவுகளையும் அதன் படைப்புகளையும் இங்கே ஆவணப்படுத்த முனைந்திருப்பது ஆனந்தமளிக்கின்றது. இங்கு காட்டப்படும் உற்பத்திகளின் தரம் பார்க்கும் பொறுப்பை வாசிக்கும் உங்களிடம் விட்டு நான் உள்ளீட்டு மூலம் பெறப்பட்ட வரலாற்றைக் காட்டியிருக்கின்றேன். அது உற்பத்திக்கான உழைப்பை மதிப்பிட உங்களுக்கு உதவுமென எண்ணுகின்றேன்.

வயது என்பது காலத்தின் அடிப்படையிலானது என்றாலும் சாதனை என்பது வயதினடிப்படையில் அல்ல என்பதை 1993-2003 தசாப்த காலம் நிரூபித்திருக்கின்றது. மூன்று தசாப்தங்கள் தான் ஒரு தலைமுறை என்பார்கள். இங்கே ஒரு தசாப்தத்திற்குள் மூன்று தலைமுறைகளின் சேவை சாதனையில்லாமல் வேறென்னவாகும்? விநாயகமூர்த்தி என்ற அந்த மாணவரை..... ஆசிரியரையும் அவரின் மாணவர்களையும் வாழ்த்துகிறேன்.

மயில்வாகனம் திலகராஜா B.Com (Hons)
Dip.in.Journalism
(முன்னாள் பணிப்பாளர் - லோயல் கல்வியகம்)
முகாமைத்துவ உசாத்துணைவர்
கொழும்பு.

# தலைவரிடமிருந்து

மலையகத்தின் கல்வி வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பினை செயற்படுத்தி வருகின்ற லோயல் கல்வியகத்தின் சங்கத் தமிழ் மன்றத்தினூடாக வெளியிடப்படும் "விழுதுகள்" என்ற சஞ்சிகையை உங்கள் கரங்களில் தவழ விடுவதில் இம்மன்றத்தின் தலைவர் என்ற வகையில் பேருவகை அடைகின்றேன். இக்கல்வியகத்தில் பயிலுகின்ற மாணவர்களின் ஆளுமைகளுக்கு களம் அமைத்துக் கொடுத்த ஆக்க இலக்கிய துறையில் அவர்களை ஈடுபடச் செய்கின்ற ஒரு சமூகப்பணியை உணர்வு பூர்வமாக செயற்படுத்துவது சங்கத்தமிழ் மன்றமாகும்.

எதிர்கால சமூக நிலைமைகளுக்கு மாணவர்களை இயைவாக்கப்படுத்துகின்ற முன்னோடி நடவடிக்கையாக இந்த ஆக்கங்களை நாம் கருதலாம். சமூகத்தின் மென்மேலும் புரட்சிகரமான உணர்வுள்ளவர்களையும் சமூக கடமைப்பாடுள்ள கல்வியாளர்களையும் ஊக்குவிப்பதில் இந்த லோயல் கல்வியகம் தொடர்ந்து பாடுபட்டு வரும் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே உண்டு. எழில் பொங்கும் மலையகம் என்பார்கள், இதில் எம்மவருக்கு கிடைத்த பெயர்களும் பட்டங்களும் படிக்காதவர்கள்தான். ஆனால் இந்நிலையினை இன்று மாற்ற முயன்ற பெருமை எம் கல்வியகத்துக்கும் சாரும். முக்கியமாக எம்மை வழிநடாத்தும் ஆசிரிய பெருந்தகைகளை சாரும்.

இவை அனைத்துக்கும் ஆரம்பமாக இருந்த எமது மதிப்பிற்குரிய ஆசிரியர் ம. திலகராஜா அவர்களை நினைவு படுத்த வேண்டும். இவரிடமிருந்து கல்வி பற்றிய ஆற்றல் இந்த கல்வியத்துக்கும் இப்போது பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களையும் வளர்க்க உதவியது என கூறினால் மிகையாகாது. இவரின் பின் இயக்குனராக இன்று சிறந்த முறையில் எமது கல்வியகத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டு வரும் அசிரியர் திரு. சாரங்கன் அவர்களையும் கூறலாம். இன்று பெரும்பாலான மலையக மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் அளவிற்கு எமது கல்வியகத்தின் பணி சிறப்புற்றுள்ளது.

எமது கல்வியகமானது இன்று பாரியளவில் கலைத்துறையில் முன்னேற்றம் கண்டுள்ளது. இந்த பெருமை எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய ஆசிரியர் க.விநாயகமூர்த்தி அவர்களையே சாரும். மேகத்தின் கொடையாய் எமக்கு கிடைப்பது மழைதான். ஆனால் அதைவிட சிறப்பாக உயர்ந்த கொடையாய் எமது ஆசிரியரிடமிருந்து எமக்கு கல்வி கிடைக்கின்றது. இதற்கு நிகராக இந்த பூமியில் எதுவுமில்லை.

இந்த பெருமைக்கு சான்றாக 1996ம் ஆண்டு மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொடுத்து மலையகத்தான் வெறுமனே மூடனாய் இல்லாமல் கல்விமான் என்ற வரிசையில் உள்ளான் எனக் காட்டி எமது ஆசிரியருக்கும் கல்வியகத்திற்கும் மலையத்திற்கும் பெருமை தேடி தந்தார்கள். இதன் மூலம் ஆசிரியர் க. விநாயகமூர்த்திக்கு ஒரு தனியாக இடம் கிட்டுவதற்கு வழிவகுத்தது. கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு. இந்த வகையில் மலையகத்தில் இன்று தனக்கென தனியான எவர் மனதையும் விட்டு விலகாமல் இந்த கல்வியகமானது பல வழிகளில் தனது பணியை ஆற்றி வரவேண்டுமென்று வாழ்த்துக் கூறி விடைபெறுகின்றேன்.

செ. செல்வகுமார்.
(2003ம் கல்வியாண்டு)
தலைவர்,
சங்கத் தமிழ் மன்றம்.

# இதழாசிரியர் இதயத்திலிருந்து...

அறியாமை எனும் இருளை அகற்றி ஒளி எனும் தீபத்தை மலரவைக்க வந்த லோயல் கல்வியகத்தின் சங்கத்தமிழ் மன்ற மாணவ மணிகளின் மகத்தான வெளியீடே "விழுதுகள்" எனும் இந்நூலாகும். இந்நூலை இன்றைய பொன் நாளிலே உங்கள் அறிவுக் கரங்களில் வழங்குவதையிட்டு பெருமிதம் அடைகின்றேன்.

இச்சமூகம் இருள் சூழ்ந்து காணப்படுவதற்கு பெற்றோரின் பங்களிப்பின்மையும் மாணவர்களின் திறமையினை வெளிக்காட்டுவதற்கு தகுந்த கற்பிப்பு இன்மையுமே காரணங்களாகும். ஆனால் இன்றைய காலகட்டங்களில் மலையகத்தில் குறிப்பாக கலைத்துறையில் ஏனையவர்களோடு போட்டியிட்டு அதில் பல உன்னத சாதனைகளை தன்னகத்தே பெற்றுக் கொண்டதை "விழுதுகள்" வெளிப்படுத்துகிறது. தவிர கல்வி முன்னேற்ற ஏணியையும் எட்டிப் பிடித்துள்ளது என்பது எமது கருத்தின் வெளிக் கொணர்வாகும்.

கடந்த கால நூல்களின் கல்வியின் தேவைப்பாட்டினையும், அதன் அணுகு முறைகளையும் மட்டும் கோவைப்படுத்திய இந்நூல் கல்வியின் வெற்றி, அதன் மகத்துவம், திறமையின் வெளிப்பாடு, கல்விக்கு அளிக்கும் உற்சாகம், கற்பவர்களுக்காக ஆர்வமூட்டும் செயன் முறை, பலதரப்பட்ட ஆக்க வெளிப்பாட்டு பிரதிகளை இந்நூல் உள்ளடக்கி இருப்பது எல்லோருக்கும் எல்லா வகையிலும் நன்மை பயக்கும் என்பது எனது பரந்த விரிந்த கருத்தாகும்.

மாணவர்களது ஆக்கங்களின் தரக்கோவையினை புகட்டியிருப்பதும் நிகழ்கால போக்குகளை விளங்கி இருப்பதும் எமது எதிர்கால சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு நல்ல ஒரு களம் அமைத்துக் கொடுக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

நீண்ட கால முயற்சியின் வெளிப்பாடாக இருந்தாலும் குறுங்காலத்தில் வெளியிட வேண்டிய கால தேவையால் அதிக ஆக்கங்களை வெளியிட முடியாமல் போய்விட்டது. இருந்தபோதும் மிகமுக்கிய அதிக வரவேற்பை பெற்ற ஆக்கங்கள் இந்நூலில் இணைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஆசியுரை வழங்கிய திரு. சிங்கரட்ணம் அவர்களுக்கும், வாழ்த்துச் செய்தி மற்றும் மதியுரை தந்தவர்களுக்கும், ஆக்கங்களை தந்தவர்களுக்கும், ஆக்க மேற்பார்வை யாளர்களுக்கும், பதிப்பகத்துக்கும், மற்றும் சங்கத் தமிழ் மன்ற உறுப்பினர்களுக்கும், நண்பர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள். தவிர இவ்வாறான எதிர்கால ஆக்கபூர்வ நடவடிக்கைகளுக்கும் உங்களின் ஒத்துழைப்பின் தேவை இன்றியமையாததாகும்.

2003 க.பொ.த உயர்தர கலைப்பிரிவு மாணவர்கள் சார்பில் வாழ்த்துகின்றேன்.

ஆ. சிவகுமார்.
*(2003ம் கல்வியாண்டு)*
*இதழாசிரியர்,*
*சங்கத் தமிழ் மன்றம்.*

# கலைத்துறை வளர்ச்சியில்

மலைநாட்டு தமிழன் அந்த தேயிலை மலையை தவிர வேறென்ன தெரியும், என்று எம்மை அழகாக அடையாளம் காட்டினார்கள். இது எமக்கு பொருத்தமாகவே இருந்தது. யாழில் இருந்து வந்தவர்கள் எமக்கு கல்வியை ஊட்டினார்கள். தமிழன் என்ற வகையில் அவர்களே நிர்வாகத்தைக் கண்காணித்துக் கொண்டார்கள். இது கடந்த ஒரு தசாப்தத்துக்கு முன் அரங்கேறிய நாடகங்களாகும். இப்போது தேயிலை தாய்க்கும் உணர்வுகள் தூண்டிவிடப்பட்டுள்ளது. நாமும் எதிர் நீச்சல் போடவேண்டும் என்ற துடிப்பும் வந்து விட்டது..

அந்த வகையில் அரசாங்க தொழில் புரியும் ஆசிரியர்கள் தங்கள் கடமைகளை சரிவர செய்தாலும் பயன் பெற கால தாமதமாகின்றன. இதை கருத்திற் கொண்டு இன்று தனியார் கல்வி நிறுவனங்கள் அளப்பரிய சேவையாற்றுவதை நாம் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

இன்று மலைநாட்டுக்கென தனியான இடம் பிடித்து தனித்துவமான ஓர் இடத்தில் இயங்குகின்ற "லோயல் கல்வியகம்" மலையகத்தின் மறுபுரட்சி என்று சொல்லுமளவிற்கு மலையக மாணவர்களை வளமான மாணவர்களாக்கி இருக்கின்றது.

இந்த லோயல் கல்வியகம் முதலில் வர்த்தக, விஞ்ஞான பாடங்களை மாத்திரம் போதித்தபோது இக்கல்வியகத்தில் படித்து சட்டபீடத்துக்கு தெரிவான எங்கள் ஆசிரியர் க. விநாயகமூர்த்தி அவர்கள் லோயல் கல்வியகத்தின் கலைத்துறையின் முன்னோடி. துரித மீட்டல் வகுப்பு என்று ஆரம்பித்து இன்று எண்ணில் அடங்காத ஆசிரியர்களையும், பல்கலைக்கழக மாணவர்களையும் தங்களின் நிலையான கல்வி வாழ்க்கைக்கு அடித்தளம் இட்டவர்.

1996ஆம் ஆண்டு இவரின் முதல் மாணவன் நானாகத்தான் இருக்க முடியும். இக்கல்வி நிறுவனத்தின் முன்னோடியான ம.திலகராஜா அவர்கள் கலைத்துறையில் உள்ள ஈடுபாடும் இந்த வேளையில் க.விநாயகமூர்த்தியின் கம்பீர ஆற்றலும் லோயல் கல்வியக கலைத்துறை வளர்ச்சிக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

இவரின் ஆசிரியர் தகுதியை நிலைநாட்டிக் கொள்ள 1996ஆம் ஆண்டு மாணவர்கள் நல்ல பெறுபேறுகளை பெற்றுக்கொடுத்து மலையக கல்விமான் வரிசையில் இவருக்கென தனியான இடம் கிட்டுவதற்கு வழிவகுத்தனர்.

அத்தோடு எங்கள் ஆசிரியர் க.விநாயகமூர்த்தி அவர்களிடம் கற்றுக்கொண்டு கலைத் துறைக்கு பிரசன்னமானவர்களில் இன்று எழுத்தாளர்களாகவும், பத்திரிகையாளர்க ளாகவும், கவிஞர்களாகவும், நல்ல ஆசிரியர்களாகவும் மிளிர்ந்துள்ளதை நோக்கும் போது இவரின் கலைத்துறை சேவையானது மலையகத்தின் மறுமலர்ச்சிக்கு இட்டு செல்லும் என்பதற்கு மாற்றுக்கருத்தே கிடையாது.

படித்துக்கொண்டே பல பட்டதாரிகளை உருவாக்கியவரின் வரிசையிலே ஆசிரியர் க. விநாயகமூர்த்தி அவர்கள் முன்னோடியானவர்.

இந்த மகத்தான வளர்ச்சியில் எங்கள் ஆசிரியர் க. விநாயகமூர்த்தி அவர்களின் சேவையை பாராட்டும் அதே வேளையில் தொடர்ந்து மலையகத்தின் கலை, சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு முன் நிற்க வேண்டும் என்று பாராட்டி விடைபெறுகிறேன்.

*இரா. மகேந்திரன். B.A(India)*

*(1996ம் கல்வியாண்டு)*

# ஆயிரத்தில் ஒருவன்

அன்புள்ள – என்
ஆசையுள்ள
லோயல் தாயே
என்னைப் போன்ற
எத்தனை குழந்தைகளை..
உன் கருவறைக்குள்
உருப் பெற வைத்திருக்கின்றாய்!

வெறும்
குழந்தைகளையா ? நீ
பெற்றாய்
இல்லை தாயே
இருக்க முடியாது.

கல்விமான்களை – உன்
கருவில் தரித்தாய்.

கலைஞர்களை – உன்
கருவில் தரித்தாய்.

வைத்தியர்களை – உன்
கருவில் தரித்தாய்.

வக்கீலையும் – உன்
வயிற்றில் சுமந்த நீ
பொறுமையிழக்காமல்
பொறியியலாளனையும்
பொறுமையாய்
பொறித்தாயே!

பெற்ற குழந்தைகளை
பெரிதாக்கி
பெயர் வைத்து – இன்னும்
பெற்றுக்கொண்டே இருக்கின்றாயே
உன் கல்வி கதவுக்கு மட்டும்
அப்படி ஒரு
சக்தியா?

பத்து மாதங்களைவிட இரு +
பத்து + நான்கு
மாதங்களின்
மகிமையினை
மலைக்காதவர் – இம்
மலையகத்தில் யாரும்
இலர்.

தாயே – உன்
வரலாற்று சேவையைக் கண்டு
வரலாற்றில் பதிக்க
வாய்ப்பில்லாமல் போகலாம்
அதற்காக
வரலாறுகள்
வருத்தப்படுமே தவிர – நீ
வருத்தப்பட
வாய்ப்பில்லை.

அம்மா – நீ
ஆசையாக பெற்ற
ஆசிரியர்களுள்
ஆயிரத்தில் – நானும்
ஓரவன்.

*ச. வில்சன்*
*(1997 ம் கல்வியாண்டு)*

# கல்வெட்டு

"நாட்டிலுள்ள ஏழை மாந்தருக்கு எழுத்தறிவித்தல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலையாய அறமாகும்."

~மகாகவி பாரதி~

கற்பித்தல் எனும் உயர்ந்த அறத்தினால் பெறுதற்குறிய புண்ணியத்தை பெறுவதோடு ஒருவருக்கு இரு கண்களை திறந்து வைக்கும் உயர்ந்த பெறுபேறு கிடைக்கின்றது. அவ்வகையில் ஹட்டனில் பலருக்கு எண்ணும், எழுத்தாகிய இரு கண்களை திறந்து வைக்கும் லோயல் கல்வியத்திற்கு சிரம் தாழ்த்துவதில் பெருமைப்படுகின்றேன்.

லோயல் கல்வியகத்தின் சேவை ஹட்டனில் சட்டம், கலை ஆகிய துறைகளுக்கு தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கையை கணிசமான அளவு உயர்த்தியது. இத்துறைகளுக்கு ஒருவர் மாத்திரமே செல்லலாம் என்ற நீண்ட கால அவல நிலையை மாற்றி ஒரே தடவையில் பலரை பல்கலைக் கழகத்திற்கு அனுப்பிய பெருமை லோயல் கல்வியகத்துக்கே உண்டு.

சேவை என்பதற்கு இலாபம் என்று பொருள் மாறிவரும் இக்கால கட்டத்தில் லோயல் கல்வியகம் தரம் வாய்ந்த ஆசிரியர்களின் வழிகாட்டலில் சிறப்பான சேவையை செய்து வருவதுடன் ஒவ்வொரு வருடமும் வசதியற்ற மாணவர்கள் பலருக்கு புலமைப்பரிசில் அடிப்படையில் இலவச சேவை செய்வது லோயலின் மகத்தான பணிகளில் ஒன்றாகும்.

1996 - 1998 ஆண்டுகளில் லோயல் கல்வியகத்தின் கலைத்துறை மாணவன் என்ற வகையில் எங்களுக்கு தமிழ், புவியியல், அரசறிவியல் பாடங்களுக்கு சிறப்பானதொரு வழிகாட்டலை லோயல் செய்தது என்பதில் எங்கள் எவருக்கும் மறுப்பில்லை. இங்கு அடிக்கோடிட்டு சொல்ல வேண்டியது யாதெனின் இவ்வாண்டுகளில் வர்த்தக பிரிவு மாணவர்கள் நான்காவது பாடமாக தமிழ் பாடத்தினை எடுக்க வேண்டிய ஒரு நிர்ப் பந்தத்தில் இருந்தார்கள். இவர்கள் தமிழ் பாடத்தில் அதிக புள்ளிகளை எடுக்க முடியாத வேதனையில் இருந்தது நானறிந்த உண்மை. ஆனால் லோயலில் தமிழ் பாடம் கற்ற மாணவர்கள் சோதனையில் வேதனையை நீக்கி சாதனை செய்தார்கள். புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி மாணவன் சரவணன், புனித கெப்ரியல் கல்லூரி மாணவி ஷோபா ஆகியோர் தமிழ் பாடத்தில் அதிவிஷேட சித்தி (A) பெற்றனர். இவர்களின் பல்கலைக்கழக பிரவேசத்துக்கு தமிழ் பாடத்தின் புள்ளிகள் கணிசமான அளவு உதவியிருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது. லோயல் கல்வியகத்தின் கலைத்துறை கல்வெட்டுகளில் இதுவும் ஒன்றே.

ஆக தனக்குப் பின் தன் சேவையை சரிவர செய்வதற்கு தங்களுடைய மாணவர்களை வழிநடத்தி வாழ்விப்பது லோயல் கல்வியகத்தில் மற்றுமொரு கல்வெட்டாகும்.

ஹட்டனில் லோயல் கல்வியகத்தின் கல்வெட்டு சாதனைகள் பின்னும் பொறிக்கப்பட்டுக் கொண்டே இருக்க என் நல்வாழ்த்துக்கள்.

"புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
பேரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்"

*மாணவன்*
*(1998ம் கல்வியாண்டு)*

*க. கருணாநிதி*
*கலைப்பீடம்*
*இரண்டாம் வருடம் (Geography Spl.)*
*கொழும்பு பல்கலைக்கழகம்.*

# ஒளிவேர்

லோயல் கல்வியக சங்கத் தமிழ் மன்றத்தின் "விழுதுகள்" நூல் வெளியீட்டில் 1999ம் ஆண்டு மாணவர்கள் சார்பில் எனது உளப்பதிவுகளை பகிர்ந்துக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

1997 - 1999 வரையிலான காலப்பகுதியில் நாங்கள் நு/ தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் கலைப் பிரிவில் கல்விக் கற்றுக்கொண்டிருந்தோம். அக்காலப்பகுதி அப்பாடசாலையில் உயர்தர பிரிவில் கல்வி கற்ற மாணவர்களுக்கு ஒரு இருள் சூழ்ந்த காலப்பகுதியாகவே இருந்தது. ஏனெனில் இப்பாடசாலையை சிறந்த முறையில் நிர்வகித்து வந்த அதிபர் திரு. விஜயசிங் அவர்கள் ஹட்டன் ஹைலன்ஸ் மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அதனால் அரசியல் விஞ்ஞான பாடத்திற்கு ஆசிரியர் வெற்றிடம் ஏற்பட்டது. அதனை தொடர்ந்து ஸ்திரமற்ற நிர்வாகத்தினால் ஆசிரிய மாணவர்களிடையே கருத்து மோதல் ஏற்பட்டு அது கைகலப்பில் முடிவடைந்தது. இதனால் ஆசிரியர்கள் கற்பித்தலில் பெரிதளவு அக்கறை காட்டவில்லை. எனவே மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிப்படைந்து காணப்பட்டது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் எங்களது கல்வி கரையை தொடர முன்பே முற்றுப் பெற்று விடுமோ! என்று மனங்கலங்கி இருந்தபோது, ஹட்டன் "லோயல்" கல்வியகத்தில் தமிழ்,, அரசியல் விஞ்ஞான பாடங்களை சிறப்புற கற்பித்துக் கொண்டிருந்த திரு. க. விநாயகமூர்த்தி அவர்களின் பெயரைக் கேள்விப்பட்டு மன ஆறுதலடைந்தாலும் கல்வியகத்தில் இடப்பற்றாக்குறை காணப்பட்டமையால் ஆசிரியரிடம் கற்பதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. ஆனால் இறைவனின் கருணையில் தலவாக்கலையில் சிறப்புற இயங்கிக் கொண்டிருந்த 'விக்டரி' கல்வியகத்தின் இயக்குனர் ஆசிரியர் திரு. குலசேகரம் அவர்களின் மூலமாக ஆசிரியர் திரு.க.விநாயகமூர்த்தி அவர்களை தலவாக்கலைக்கு வரவழைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டோம். ஆனால் ஆசிரியர் நேரமின்மையால் மறுத்துவிட்டார்.

இந்நேரத்தில் ஆசிரியர் திரு. குலசேகரம் அவர்கள் சமயோசிதமாக யோசித்து ஆசிரியர் அவர்களின் "லோயல்" கல்வியக நேர அட்டவணையை பாதிக்காத வகையில் நேர அட்டவணை ஒன்றை தயாரித்து வலு கட்டாயமாக கொடுத்துவிட்டு வந்தார். இந்நேரத்தில் விரிவுரையாளர் திரு. சிங்கரட்ணம் அவர்களின் உறுதிமொழியோடு ஆசிரியர் அவர்கள் தனது முதலாவது வகுப்புக்கு வருகை தந்தார். இங்கு வரும்போது அவரது மனநிலை இவ்வாறு காணப்பட்டதாக ஆசிரியரே கூறினார். "போய் பார்ப்போம் மாணவர்கள் ஒழுங்காக சமுகமளிக்காவிட்டால் அதை காரணம் காட்டி நின்று விடுவோம்."

ஆம், அவர் நினைத்தது போல முதலாவது வகுப்பில் மூன்று மாணவர்கள் மாத்திரமே. அதில் நானும் ஒருவன் என்று கூறிக்கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன். ஆனால் தொடர்ந்து வந்த வகுப்புகளில் மூன்று ஆறாகி ஆறு அறுபதாகியது. முழு வகுப்புமே ஆசிரியர் வகுப்பானது. இக்காலப்பகுதியில் அதாவது, எஞ்சியுள்ள ஒரு வருட காலப்பகுதியில் விரைவாகவும், விளக்கமாகவும், எளிமையாகவும், இனிமையாகவும் தனது கற்பித்தலை சிறப்பாக மேற்கொண்டு 1999ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற இறுதி பரீட்சைக்கு எங்களை தயார்படுத்தினார்.

ஆசிரியரின் கபடமில்லாத கற்பித்தலினால் மாணவர்கள் அனைவரும் பாடசாலையில் விரிசலடைந்து ஆசிரிய - மாணவ உறவை இவ்வாசிரியரிடம் நெருக்கமாக்கிக் கொண்டனர். இதற்குச் சான்றாக எமது பிரியாவிடை வைபவத்தை சுட்டிக் காட்டலாம். அதாவது ஆசிரியர் இதுவரைக்கும் தான் கற்பித்த வகுப்புகளில் காணாத ஒரு பிரியாவிடை வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டது. பிரியாவிடை இறுதி நிகழ்வின்போது ஆசிரியரை விட்டு வேறொரு கண்டத்திற்கு நாங்களெல்லாம் செல்வது போன்ற உணர்வு. இதுவரைக்கும் எங்கள் வகுப்பில் கண் கலங்காத ஜீவன்கள்கூட அன்று அப்பிரிவை ஏற்றுக்கொள்ள முடியாது கணகலங்கின. இதை பார்த்து ஆசிரியரும் கண்கலங்கியதை காணக்கூடியதாக இருந்தது.

இறுதியாக ஆசிரியரின் உலகிற்கு வெளிப்படுத்தும் முகமாக சரித்திரம் காணாத ஒரு பெறுபேற்றை மாணவர்கள் பெற்றுக் கொடுத்தனர். அந்த வகையில் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்திலிருந்து ஒரே தடவையில் நானும், எங்களது வகுப்பைச் சார்ந்த மா. கொட்வினும், பெ. ஸ்டேனலி குமாரும் பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு சென்று இன்று கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றோம் என்றால் அதற்கு ஆசிரியர் திரு.க விநாயகமூர்த்தி அவர்களே காரணமாகும்.

அது மட்டுமன்றி பலர் சில புள்ளிகளால் பல்கலைக்கழக தெரிவை இழந்தார்கள். அவர்கள் அனைவரும் இன்று வெளிவாரி படிப்பை (G.A.Q) மேற்கொண்டு வருவதுடன் அனைவருமே ஸ்ரீ பாத தேசிய கல்வி கலாசாலையில் கல்வி கற்று வருகின்றனர்.

மேலும் ஆசிரியரின் வஞ்சகமில்லாத பரந்த மனப்பான்மையால் எங்களையும் கல்வி கற்பித்தலில் இணைத்து சிறந்த பயிற்சிகளை வழங்கி அவருக்கு பின் தலவாக்கலையில் தனது பணியை தொடரும் பொறுப்பை அவரின் வாரிசுகளான எங்களிடம் ஒப்படைத்து "பிரைட்" கல்வியகத்துக்கு ஸ்தாபகராகவும் ஆலோசகராகவும் இருந்து வருகின்றார்.

அந்த வகையில் ஆசிரியரின் அயரா சேவை இன்று மலையகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்றே கூற வேண்டும். எனவே ஆசிரியரின் திறமைகளும் சேவைகளும் மேலும் வளர வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

*மாணவன்*
*(1999ம் கல்வியாண்டு)*

க. கனகராஜ்
கலைப்பீடம்
முதலாம் வருடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

# விழுதின் விழுதுகள்

எண்ணற்ற
நினைவுகளில்......
அந்த
கலைக் கூட
ஈராண்டு நினைவுகள்
மட்டும் மனதின்
சின்னதோர் பிரதேசத்தில்
இன்னும்
சிக்கிக் கொண்டிருக்கின்றது.

வார இறுதி நாட்களில்
வாழ்க்கையை
கற்றுக் கொடுத்த
ஆலயம் அந்த
கலைக்கூடம்.

அன்று
பாண்டவர்களாக
நாமிருக்க
துரோணராயிருந்த
அதே
ஆசிரியர்தான்
இன்று...
நாம் ஏகலைவராக
மாறி இருக்கும்போதும்
இடம் மாறாமல் இருக்கிறார்.

கண்களில்
கனவுகளோடு
கலைக்கூடத்திற்கு
என்னுடன் வந்த
எண்ணற்றவர்களுக்கு
புத்தாயிரமாம் ஆண்டில்
புது ரத்தத்தைப்
பாய்ச்சினார்.

தன்
கிளைகளாலும்
விழுதுகளாலும்
எத்தனை
பறவைகளுக்கும்
நிழல் கொடுத்த
ஆலமரமானார்.

அனாதை
வேர்களில்
ஆரம்ப மழை போல்
அமைந்த அந்த
வகுப்பறைக் கூட்டங்களை
வாழ் நாட்கள்
உள்ளவரை
மறக்க இயலாது.

எம் தோள்களில்
கனக்கும் இலட்சியங்களை
வலிக்காமல் ஏற்றி
கலைக் கூட
களத்தினுள்
எழுதுகோல் எனும்
ஆயுதம்
ஏந்த வைத்து
அகில இலங்கைக்கும்
அறிமுகப் படுத்திய
ஏணிப்படியான
நிலாக் காலங்கள்
அவை.

சிதைக்காத சிற்பியால்
அழகாக செதுக்கப்பட்டது
எமது
கலைக்கூட ஈராண்டு
சிறப்பு.

நல்ல நகைச்சுவைகளால்
சிரிப்பில்
சிகரங்களைத்
தொட்ட – அந்த
நந்தவன
நாட்கள்தான்
இன்னும்
என்னை பாரமற்ற
மெல்லியதோர் பிரதேசத்தில்
மிதக்க வைத்துக்
கொண்டிருக்கின்றது.

என்றாலும்...
நினைவென்ற
நிழலின்
கல்வெட்டாக
விடைபெற்ற
வினாடிகளில்
விழியோரம்
விழுந்த நீராக
அந்த
நினைவுகளும்
இன்னும்
ஈரமாக......

*சி. பிரஷாந்தினி.*
*(2000ம் கல்வியாண்டு)*

# சில வார்த்தைகள்

லோயல் கல்வியக "சங்கத் தமிழ் மன்றத்தின்" முதல் மலராக வெளிவரும் "விழுதுகள்" நூலின் அறுவடையில் என்னுடைய ஆக்கமும் இடம்பெறுவதை முன்னிட்டு பெரும் மகிழ்வடைகின்றேன்.

மலையக சமூகத்தின்மீது அதீத அக்கறையைக் கொண்ட லோயல் கல்வியகம் படித்த பல தலைமுறையினை உருவாக்கி உள்ளதென்பதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மையாகும். அந்த வகையில் இக்கல்வியகத்தின் கலைத் துறைக்கு தன்னை அர்ப்பணம் செய்த ஆசான்களாக குறிப்பிடத்தக்கவர்கள் பொ.சிங்கரட்ணம், க.விநாயகமூர்த்தி, அறிவழகன், வில்சன், கனகராஜ், சிவானந்தன், கருணாநிதி, சதீஸ்வரன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இக்கல்வியகத்தின் கலைத்துறை வளர்ச்சிக்கும் அதன் செயற்பாட்டிற்கும் இலக்கணமானவர்கள் என்பதும் பொருந்தும்.

1999 - 2001 ம் கல்வியாண்டுகளின் காலகட்டத்தில் என் உணர்வுகளில் பகிர்ந்த சம்பவங் களையும் என் நெஞ்சை தொட்ட விடயங்களையும் மூளையில் உறைந்த நிகழ்வுகளையும் தொகுத்து தருவது பொருத்தமுடையது என நினைக்கின்றேன். இக்கல்வியகத்துக்கு பல ஆசிரியர்கள் பணிபுரிந்தாலும் என் நெஞ்சை தொட்டவரும் என் சக நண்பர்களின் சிறப்பான கல்வி மேம்பாட்டிற்கு வழிகாட்டியவரும் மதிப்பிற்குறிய ஆசான் திரு. க. விநாயகமூர்த்தி என்றால் அது பெருமிதமடைய வேண்டிய ஒன்றாக நான் கருதுகின்றேன்.

இக்கல்வியகம் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றினை கொண்டிருக்கின்றது. இந்த பன்னிரெண்டு ஆண்டு கால வரலாற்றில் ஆறு ஆண்டுகள் தனது உடலையும் புலமை உழைப்பையும் ஒருங்கே வைத்து அர்ப்பணம் செய்த ஆசிரியர் க. விநாயகமூர்த்தி அவர்கள் எனலாம். தான் என்ற சுயநல போக்குகள் இல்லாமல் பிறர் நலம் பேண இவர் தனக்கு பின் மலையக சமூகத்தை கட்டிக் காப்பதற்கு பல மாணவ சமூகத்தையும் ஆசிரியர்களையும் உருவாக்கி அதில் என்னையும் லோயல் கல்வியக ஆசிரியர் என்ற அங்கீகாரத்தையும், அந்தஸ்தையும் பெற்றுத்தந்தவர். ஆகவே தன்னை எப்படி நேசித்தாரோ அதே போல் பிறரையும் நேசித்தவர். எனவே இக்கல்வியக வரலாற்றில் திருப்பத்தினை ஏற்படுத்தியவர் இவர் என்பது பொருந்தும்.

இக்கல்வியகம் ஒரு மாணவனை எவ்வாறு வழி நடாத்தவேண்டும் என்ற ஆதர்ஷ னங்களையும், தெரிமுறைகளையும், கற்றலும், கற்பித்தலும் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனையும் மாணவரின் பலவீனத்தைச் சுட்டிக்காட்டி பலத்திற்கு புலம் போட்டு காட்டுவதில் உன்னதமான கல்வியமாக இருந்துள்ளது. தவிர முடிந்தவரை வாழ்ந்துவிட்டு முடியாத போது இறந்தவர்கள் எல்லாம் வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் என்ற பட்டியலுக்குள் வர மாட்டார்கள். இருக்கும் காலத்திற்கு மட்டுமன்றி பிறக்கும் காலத்திற்கும் பயன் உடையவர்களே வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் என்ற வரலாற்று உண்மைக்கு இலக்கணமானவர்களே லோயல் கல்வியக ஆசிரியர்களாவர்.

லோயல் கல்வியகத்தின் வளர்ச்சியும் மேம்பாடும் இனி வரும் ஒவ்வொரு மாணவனின் கைகளிலும் தங்கியுள்ளது. எனவே இந்நாட்டு மலையக சமூகத்தின் ஒரு திருப்பமாக இக்கல்வியகம் வளர வாழ்த்துகின்றேன்.

*மாணவன்*
*(2001ம் கல்வியாண்டு)*

*பி. டொமினியன் மார்க்*
*கலைப்பீடம்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*

# நினைத்திடு மனமே

பரந்து விரிந்த இப் பூமியில்
மலையக மைந்தர்களுக்கு
அடைக்கலம் தந்த
உன் சேவையில் ஏற்றம் கண்டேன்!

இளம் நெஞ்சங்கள்
இதய துடிப்பான
விவேகத்தைக் கண்டு
உயர் தரம் எனும்
உயரத்தில் நின்று
வைத்தியனாய்..., வக்கிலாய்....,
அறம் பாடும் ஆசிரியனாய்....,
புறம் செய்யும் பொறியியலானாய்....,
கணக்கு விடும் கணக்காளனாய்.....
நாட்டின் நற்குடி மக்களாவதற்கு
எமக்கு கிடைத்த வரப்பிரசாதம்
"லோயல் கல்வியகமே"
நீ வாழ்க!

கல்வியகமே சற்று திரும்பிப் பார்!
நீ தமிழ் தாய்க்கு அணிகளை
அணிவித்து அழகு பார்த்தாய்
கற்காலம் தொடக்கம்
பொற்காலம் வரை
தமிழுக்கு அமுதானாய்

கல்வியகமே, நீ தடம் பதித்த
சுவடுகள் – எதை சொல்கின்றது
என்பதை விட
ஒன்றையே சொல்கின்றது
உன் உயர்வின் எல்லையை
காண முடியவில்லையாம்.

மலையக மனங்களின் கல்வி
வேட்கையில் நீயோர்
அக்கினிக் குஞ்சு!
உன் பணியைக் கண்டு
பெற்றாரும் மற்றாரும்
வியந்து நிற்க
நான் மட்டும் விதிவிலக்கா?

உன் உயர்வின்
எல்லையை
சொல்லவினாலும் ஒன்றும்
செய்ய முடியாது இதை
நினைத்து முடி சூடிய
மன்னனாக வீற்றிருக்கும்
உன் புகழை போற்றிடவே
துடிக்கிறது
என் மனது.

ரா. யோகசத்தியம்மா.
மாணவி
2002ம் கல்வியாண்டு

# கரையேற்றிய பொக்கிஷங்கள்

புத்தாயிரம் ஆண்டில் மலையகத்தின் மாணிக்க நகரில் மகத்துவம் பெற்று விளங்கும் ஹட்டன் லோயல் கல்வியகத்தின் கலைத்துறை ஆளுமையை மேம்படுத்துவதற்கான முதல் மலராகவும் "2002ம் ஆண்டு" கல்வி பயின்ற கலைத்துறை மாணவர்களின் கூட்டு முயற்சியின் ஓர் அறுவடையாகவும் எங்களின் ஆக்கம் இடம்பெறுவதில் பெருமிதம் கொள்கின்றோம்.

பின்னடைந்து இருந்த எங்களை முன்னெடுத்துச் சென்று எத்தனையோ சிரமங்களை எதிர் நோக்கியதென்பது தெளிவு. ஆனால் அச்சிரமங்களிலும் பல்கலைக்கழகத்திற்கு பல மாணவர்களை அனுப்பி எமக்கு உதவிய நேயம் கொண்ட மலையகத்தின் மணி விளக்காக திகழ்ந்து கொண்டிருக்கும் ஆசான்கள் க.விநாயகமூர்த்தி, அறிவழகன், கருணாநிதி, கனகராஜ், சதீஸ்வரன், டொமினியன் மார்க் ஆகியவர்களும் எங்களின் சீரிய சிந்தனை சிதைந்து விடாமல் எங்களை கரையேற்றிய பொக்கிஷங்கள் என்றால் மிகையாகாது.

மாணவர்களின் நலனை தனது நலனாகக் கொண்டு கல்வியிலும் சிந்தனையிலும் தாழ்ந்து கிடக்கும் மாணவர்களின் மத்தியில் இறங்கி அவர்களோடு கைகுலுக்கிக் கொள்ளாது கரங்களை உயர்த்தி கைக்குழுக்குவதோடு நின்று விடாமல் தூக்கி விடுவதுதான் சங்கத் தமிழ் மன்றத்தின் நோக்கமாகும். சிறந்த பெறுபேற்றினை பெற்றவர்களுக்கு ஆசிரியர்களாகவும் ஆண்டுதோறும் மாணவர்களுக்கு புலமை பரிசில் திட்டம் வழங்கியும் இலவச கணினி தொழிநுட்பம் என பல சேவைகளை செய்து மாணவர்களின் நோக்கத்தை இப்படி புரிந்து வைத்திருக்கும் அறிவு ஜீவிகளையெல்லாம் ஆராதிக்கின்ற ஆசான்கள் "லோயல்" கல்வியத்தில்தான் உண்டு என்றால் மிகையாகாது.

அறிவின் சிறப்பையும் பெருமையையும் எமது மாணவர்களும் சமுதாயமும் உணர்ந்து செயற்படுவதுடன் அறிவின் விருந்துக்கு ஆவணம் செய்ய முழு மூச்சுடன் உழைக்க முன்வரும் மன்றமாக "சங்கத் தமிழ் மன்றம்" சுடர்விட்டு பிரகாசிக்க இருக்கின்றது. இன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் பல புதுமைகளுக்கெல்லாம் முன்னோடியாய் திகழ்ந்து கொண்டிருக்கும் லோயலின் அளப்பரிய சேவை சமுதாயத்துக்கு தேவை. அந்த வகையில் '2002ம் ஆண்டு' விதைக்கப்பட்ட கலைத்துறை மாணவர்களின் விதைகள் முளைத்து முகம் காட்டிக்கொண்டிருக்கின்றன.

இறந்த காலத்தில் மட்டுமல்ல எதிர் காலத்திலும் நல்ல பல சேவைகள் செய்து பயனுடையவர் வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்தவர்கள். அதற்கு நிகராக எங்களின் ஆசான்களும் லோயல் கல்வியகமும் மென்மேலும் வளர வேண்டும் என வாழ்துகின்றோம்.

பூ . உமாச்சந்திரன்
மாணவன்
(2002ம் கல்வியாண்டு)

# வளர்க உன் பணி!

வாழ்கையின் ஏணியில்
கால் வைத்த எங்களை
சறுக்காமல் ஏற்றும்...........
லோயல் கல்வியகம் – ஒரு
லோயர் தான்..........
கற்பவருக்கு மட்டும் – கற்கும்
எங்களுக்காய் எப்போதும்
புத்தகங்களுடனும் கரும்பலகையுடனும்
வாதாடுகின்றவர்கள்.

எங்களுக்கு...........
எழுத்தறிவித்த இறைவன்களே
உங்கள் – சிகர
எண்ணங்களில் – சிறு
சிற்றெறும்பாய் நாங்கள் இதோ
கல்வியக முன்றில்.

மலையக சமுகத்தில்
மரணக் குழிகளின் அளவுகளான
மலைகளில் மலர்ந்த எங்களை
மலையுயரங்களை விட வாழ்வின்
உயரங்களை காண்பித்தவர்களே.
வாழ்க............ நீங்கள்.

பதினொன்றை பள்ளியில் முடித்து
படியெடுத்தோம் சேர்ந்து.
பன்னிரெண்டுக்கு.. இதில்
சித்தியடைவோமென
பலமாக்கினீர்கள் எங்கள் மனதை
பல்கலைக்கழக முன்றலில் நிற்போமென
சிலர் நிற்கின்றார்கள்.
பலர் காத்துக்கொண்டிருக்கின்றோம்.

எங்களின்
தன்னம்பிக்கை இல்லாத
எண்ணங்களை
தகர்த்தெறிய வைத்தவர்கள்
கபிலன் முதல்
கம்பியூட்டர் பாடம் வரை
கற்றுக் கொடுக்கும் திறன்
உனைவிட யாருக்குண்டு.

உணர்வுகளை வெறுக்க வைக்கும்
உதவாத பாடங்களையும்
உவப்பாக்கி தந்தவர்களே..!
நான் கூறுகின்றேன்...
நீங்கள்...
கலையின் அருவி
கணிதத்தின் ஏரி
விஞ்ஞானத்தின் ஆறு
வணிகத்தின் ஊற்று.

எத்தனை முறை
மறைத்தார்கள் – இங்கு
கற்க வரும் மாணவர்களை
அட.. இவர்கள்
சூரியனுக்கே..?
கருமை பூசிடுவார்களா?

நாங்கள்தானே
படிக்கின்றோம் – ஏன்
நீங்கள் உங்களை
தியாகிக்கின்றீர்கள்.
எத்தனை பேர
பணங்கேட்டு விற்கின்றார்கள்.

நாங்கள் கற்கும் கல்வியை
கற்பிக்கவும் கரையேற்றவும்
உங்களால் மட்டுந்தானே முடிந்தது!

சங்கங்கள் வைத்து
தமிழ் வளர்த்தார்கள் அன்று
ஆனால்........
சங்கத் தமிழ் மன்றம் வைத்து – எங்கள்
தமிழ் அறிவை வளர்க்கின்ற பெருமை
உனையன்றி வேறு யாருக்குண்டு.

நீ
செய்த சாதனைகளின்
அறுவடை
இன்று வெளிவரும் – இச்சஞ்சிகை
இன்னும் எத்தனையோ பயிர்கள்
அடுத்தடுத்து அறுவடைக்காய்...

மாசில்லாத மனங்களில்
தூசுபடுவதை அவ்வப்போது
துடைக்கும் கரும்பலகை துணியில்
கண்டிருக்கின்றோம் உங்கள்
துணைசேவையினை
இன்றும்...
இனி வரும் காலத்துக்கும்...
என்றும்....
தொடர வேண்டும் உங்கள் பணி

*செ. அருள்வாணி*
(2003ம் கல்வியாண்டு)

# தொடரட்டும் ... இந்த பொற்காலம்

"கடின உழைப்பிற்குநிகர் ஏதுமில்லை"

-அறிஞர் அண்ணா-

மலையக சமூகத்தின் கல்வியினை அபிவிருத்தி செய்து மாணவர்களினதும் மக்களினதும் விழிப்புணர்வினை தூண்டி ஹட்டன் நகரில் "தனக்கு நிகர்" தானே என்ற பிரணவ பொருளோடு வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருக்கும் ஒரே கல்வியகம் என்றால் அது □லோயல் கல்வியகமாகத்தான் இருக்க முடியும்.

வளமிருக்கும் இடங்களில் திறமைகள் புதுப்பிப்பது பெரியதொரு விடயமல்ல. ஆனால் குறைவான வளங்களுடன் கூடிய சாதனை புரிவதென்றால் அது சரித்திரத்தில் எழுதும் சாதனை முகவரிகளைவிட வேறொன்றுமில்லை.

மலையகத்தில் இருந்து கலைப் பிரிவினுள் கல்வி பயிலும் மாணவர்கள் அதிகளவில் காணப்பட்டாலும் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறுபவர்கள் விரல் விட்டு எண்ணும் அளவிலேயே காணப்பட்டது அக்காலம். இதனை மாற்றி வரும் ஒன்றிற்கு கணிசமான அளவு உயர்த்தி உயர் பெறுபேறுகளுடன் பல்கலைக்கழகத்திற்கு உயிர்ப்பும் உயிரும் கொடுத்த ஆசான்கள் கலைப் பிரிவினுள் வெற்றிக் கொடியை நிலைநாட்டியதை நாம் மறக்கவோ மறுக்கவோ முடியாத உண்மை.

வறுமைக் கோட்டிற்குள் வட்டமுறும் பெற்றோர்களின் பிள்ளைகளும், கல்வியில் பின்தங்கிய சமூகமும் நவீன உலகில் வாழும் ஒவ்வொரு மலையக மாணவர்களின் கல்வியில் பெரிய விருட்சத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. இவர்களின் கல்வியில் திறமைகளை அடிப்படையாக வைத்து, இவர்களுக்கு புலமைப் பரிசில்களையும், இவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பெரியதொரு பங்களிப்பினையும் நல்குகின்றது என்றால் அதற்கு பிரிதொரு வார்த்தையில்லை.

பொருளியல், முகாமைத்துவம், மருத்துவபீடம் போன்றவை மலையகத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு செல்லும் துறைகளாக காணப்பட்டது. இதனை மாற்றி "முடியாது என்ற வார்த்தை மட்டுமே முடியாது, எங்களால் முடியாதது எதுவுமில்லை" என்ற கூற்று ஒரு சவுக்கடியாக அமைந்து விட்டது. ஏனைய கல்வித் துறையினருக்கும், கல்வி நிறுவனங்களுக்கும். இதற்கு காரணமாக அமைந்தவர்கள் கலைப்பிரிவின் ஆசான்களே.

"இவ்வுலகை வியாக்கியானம் செய்வதோடு அமையாது
அதனை மாற்றி அமைக்கவும் ஆயத்தமாக இருக்கட்டும்;"

-மகாகவி பாரதியார்-

"நாம் முன்வைத்த பாதத்தை பின் வாங்கும் பழக்கம் என ஆன்மாவுக்கும், இத்தேசத் துக்கும் ஒரு போதும் கிடையாது" என்ற மகாகவியின் வாசகத்தோடு சென்று கொண்டிருக்கும் லோயல் கல்வியகமும் அங்குள்ள ஆசான்களும் தடைகளைத் தாண்டி பொற்கால விடியலில் காலடி வைத்துவிட்டார்கள். தொடரட்டும் இந்த பொற்காலம்.

"இனியொரு விதிசெய்வோம்
அதை எந்நாளும் காப்போம்."

*இரா. தனபதி*

*மாணவன்*
*(2004ம் கல்வியாண்டு)*

# இருளைப் போக்கும் மின்மினிகள்

மலையகத்து மண்ணிலே கல்வித்தாயின் மாலைக்கு பட்டதாரிகள் எனும் பல ஒப்பற்ற முத்துக்களை சேர்ப்பதில் நிகரற்று விளங்குகின்ற ஹட்டன் லோயல் கல்வியகம் வெளியிடுகின்ற "விழுதுகள்" என்ற சஞ்சிகைக்கு மீட்டல் வகுப்பு மாணவர்கள் சார்பில் சிறு கருத்துரையை இணைப்பதில் பேருவகை அடைகின்றேன்.

மலையக மாணவர்களுக்கு கல்விக் கடலில் பயணிக்க ஒரு தோணியைப் போல் இயங்குகின்ற லோயல் கல்வியக இயக்கத்துக்கு வாழ்த்துக்களை சமர்ப்பிக்கின்றேன். சிறப்பாக கலைப்பிரிவை வளர்ப்பதிலே பெரும் பங்காற்றுகின்ற ஆசிரியர் திரு.க. விநாயகமூர்த்தி அவர்களை விழிக்குமிடத்து,

கற்பித்தலில் தனக்கென ஒரு தனி பாணியினை ஏற்படுத்தி கற்பித்தலை மேற்கொள்வது இவரின் வெற்றிக்கொரு காரணம் எனலாம். குற்றோரை எல்லோரும் கற்பித்தலில் திறமை சாலிகளாவதில்லை. இவர்களுள் ஒரு சிலரே கற்பித்தலில் பிரகாசிப்பதை நாம் காணமுடிகின்றது. இவ்வகையில் மாணவர்களின் உள்ளக்கிடக்கை அறிந்து அவர்களை எம்முறையில் அணுகினால் அவர்களுக்கான கல்வியை புகட்டலாம் என்பதினை நன்கறிந்து அதன்படியே தன் கற்பித்தலை மேற்கொள்வதில் சிறந்தவராக ஆசிரியர் க. விநாயகமூர்த்தி விளங்குகின்றார்.

எம் வேண்டுகோளை ஏற்று மீட்டல் பயிற்சி வகுப்பினை ஆரம்பித்து சிறு குறுகிய காலப் பகுதியிலேயே எம் மனங்களுக்கு கற்றதற்கான திருப்தியை ஏற்படுத்தி, விரிவான தெளிவான, இலகுவான முறையில் எமக்கு கல்வி புகட்டிய எம் ஆசிரியரை வாழ்த்துவது தகும். அதனோடிணைத்து எமக்கான அறிவுரைகளை நாம் ஏற்றுக்கொள்ளும் வகையில் கூறி, கற்பதன் பயன்பாட்டை தம் வாழ்க்கை அனுபவங்களோடு விபரித்து ஒவ்வொருவரும் "நான் நன்றாய் கற்க வேண்டும்" என்ற ஓர் எண்ணத்தை ஏற்படுத்தி எமக்கு உற்சாகம் தருவதில் சிறந்தவர்.

தோல்வியினை பொருட்படுத்தாது கற்கக் கூடிய முறையினை போதித்த எம் ஆசிரியர் அவர்களுக்கும், இவரோடிணைந்து கலைத்துறை வளர்ச்சிக்கு பங்காற்றும் ஆசிரியர்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். கற்பித்தலில் மட்டுமன்றி தாம் கற்கும் துறைகளிலும் சிறந்து விளங்க எம் மனமார்ந்த வாழ்த்துக்களையும் எம் ஆசிரியர்க்கு தெரிவிப்பதில் பெரும் மகிழ்வு கொள்கின்றோம்.

ஆ. அலோஷியஸ்.
மீட்டல் வகுப்பு - 2003
லோயல் கல்வியகம்,
ஹட்டன்.

# சங்கத் தமிழ் மன்றம்

## லோயல் கல்வியகம் - ஹட்டன்

**பொறுப்பாசிரியர்** க. விநாயகமூர்த்தி
பயிலுனர் சட்டத்தரணி – இலங்கை சட்டக் கல்லூரி

**தலைவர்** எஸ். செல்வகுமார்
(புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி – ஹட்டன்)

**உப தலைவர்** வி. வசந்தராணி
(கணபதி தமிழ் மகா வித்தியாலயம் – நோட்டன்)

**செயலாளர்** எம். பிரபுகலா
(ஹைலன்ஸ் மத்திய கல்லூரி – ஹட்டன்)

**இணைச்செயலாளர்** வி. வின்சன்
(கவரவெல தமிழ் மகா வித்தியாலயம் – மஸ்கெலியா)

**பொருளாளர்** எஸ். சிவகுமார்
(கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம் – கொட்டகலை)

**இணைப் பொருளாளர்** எஸ். அருள்வாணி
(சென்ஜோசப் தமிழ் வித்தியாலயம் – மஸ்கெலியா)

## பத்திரிகைக்குழு

**இதழாசிரியர் :** ர. சிவகுமார்
(என்பீல்ட தமிழ் மகா வித்தியாலயம் – டிக்கோயா)

ஆர். தபராஜ்
(சென்கிளேயர் தமிழ் வித்தியாலயம் – தலவாக்கலை)

ஆர். வித்தியா
(புனித கேப்ரியல் மகளிர் மகா வித்தியாலயம் – ஹட்டன்)

கே. சந்திரவதனி
(பூண்டுலோயா தமிழ் வித்தியாலயம் – பூண்டுலோயா)

# சங்கத் தமிழ் மன்றம்

## விருது பெறுவோர்

A/L 2003

### கட்டுரை (நடுவர் ~ சாரல் நாடன்)

முதலாம் இடம் - "மலையக வாய்மொழிப் பாடல்கள்" கு. சுகுனா

இரண்டாம் இடம் - "சி.வி. வேலுப்பிள்ளையின் இலக்கிய பணிகள்" கோ. யோகபவானி

மூன்றாம் இடம் - "போரும் மனித வாழ்க்கையும்" சி. ஷர்மிளதர்ஷினி

### சிறுகதை (நடுவர் ~ மொழிவரதன்)

முதலாம் இடம் - "ஒளி பிறந்தது" சி. புஷ்பராஜ்

இரண்டாம் இடம் - "புதிய விதிகள்" பி. ஜேசுராணி

மூன்றாம் இடம் - "விடியலைத் தேடி" பெ.மார்க்ரட் மேரி

### கவிதை (நடுவர் ~ மல்லிகை சி. குமார்)

முதலாம் இடம் - "யுகம் மாற யுத்தம் மாற" சி. கவிதா

இரண்டாம் இடம் - "யுகம் மாற யுத்தம் மாற" செ. செல்வகுமார்

மூன்றாம் இடம் - "சீர்கெட்ட நிலையினை" செ. அருள்வாணி

# மலையக வாய்மொழி பாடல்கள்

கட்டுரைப் போட்டியில்
முதலாம்
இடத்தை வெற்றிக் கொண்ட
ஆக்கம்

இயற்கை அறிவும் கலை உணர்வும் மிக்க கிராமப்புர மக்களினால் கலை உலகுக்கு கிடைத்த அதிசிறந்த பொக்கிசம் வாய்மொழி பாடல்கள் ஆகும். அதாவது அந்த மக்களின் உள்ளதில் பல்வேறு காரணங்களால் புரண்டெழும் உணர்ச்சி அலைகள், எண்ணங்கள் உள்ளத்தை விட்டு வெளியேறுகையில் அது அவர்களின் வாய்மொழியாக சிதறுகின்றது. அவ்வாறு சிதறும் வாய்மொழிகள் சுரங்களுடன் சேர்ந்து வாய்மொழி பாடல்களாகின்றன. இவை சமுதாயத்தின் "மூத்தக்கலை" எனவும், "பண்பட்ட இசை வளர்ச்சியின் மூலம்" எனவும் கூறப்படுகின்றது. காற்றில் கலந்த நித்திய வாசனை போல மண்வாசனை கமலும் இப்பாடல்கள் எல்லா நாட்டிலும் பரந்து காணப்படுகின்ற போதிலும் ஈழத்தின் குறிப்பாக எழில், தமிழ் கொஞ்சும் மலையகத்தினுடைய வாய்மொழி பாடல்கள் பற்றிய ஆய்வாக இக்கட்டுரையின் நோக்கம் அமைந்துள்ளது.

மலையக வாய்மொழி பாடல்களின் தோற்றம் தென்னிந்திய வம்சாவழிகளின் வருகையோடு ஆரம்பமாகின்றது. அதாவது 1815ம் ஆண்டு ஆங்கிலேயர் கண்டி ராஜ்சியத்தை கைப்பற்றிய கண்டி மன்னனை வேலூர் சிறையில் இட்டதன் பினனர், 13 ஆண்டுகள் கழிந்து தென்னிந்தியாவில் இருந்து ஆயிரக் கணக்கில் கூலிகளாக கொண்டுவரப்பட்டனர். அவர்கள் வந்த நாள் முதல் மனித காலடி படாத வனப்பிரதேசத்தில் கடுமையாக உழைத்து அதுவரை காலமும் எவர் மூச்சும் தீண்டாத கண்டி பிரதேசத்தினை பூத்துக் குலுங்கும் கண்டி நிலமாக மாற்றினார்கள். இன்றைய ஈழத்தின் பொருளாதாரத்துக்காக அத்திவாரம் இட்ட இவர்களின் குரல்கள்தான் முதன் முதல் மலைகளுக்கு மத்தியில் கேட்க ஆரம்பித்தது.

பாரதத்தில் ஏழைக்கிராம வாசிகளாக இருந்து கடல்தாண்டி ஈழம் வந்து மலையகத்தை தமிழ் பேசும் பிரதேசமாக மாற்றி இலங்கை மண்ணை தம் தாயகமாக நேசிக்கத் தொடங்கினர். அவர்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பேணி பாதுகாக்கும் மக்களாக இருந்த இவர்கள் கல்வி அறிவு இல்லாத எளிய பாமர மக்களாகவே இருந்தனர். இவர்கள் தங்களின் இன்ப துன்பங்களை வெளியேற்றும் வடிகாலாக வாய்மொழி பாடல்களைப் பாடினர்.

மலையக வாய்மொழி பாடல்கள் தாலாட்டு, ஒப்பாரி, தொழில், கும்பி, காதல் பாடல்கள் என ஐந்து வகைக்குள் உள்ளடக்கப்படுகின்றது. இவைகள் தமிழக வாய்மொழி பாடல்களை முழுமையாக பிரிபலிக்கின்றன. அந்த வகையில் தாயின் அன்பையும், சேயை சுற்றி எழும் கற்பனையையும் பிரதிபலிக்கின்ற தாலாட்டு பாடல்கள் சிறப்பான இடம் வகிக்கின்றன. இப்பாடல்களில் சொந்த ஊரைவிட்டு வந்த சோகமும், இனி எக்காலம் ஊர் போய் சேர்வோமோ... என்ற ஏக்கமும் இந்த உணர்வுகளால் ஏற்படும் இயலாமையினையும் வெளிப்படுத்துபவைகளாக அமைந்துள்ளன. அதற்கு கீழ்வரும் வாய்மொழி பாடலினை ஆதாரம் காட்டலாம்.

"கூடை எடுத்ததில்லை – நாங்க
கொள்ளிமல பார்த்ததில்லை
கூடை எடுக்கலாச்சு – நாங்க
கொழுந்துமல பார்க்கலாச்சு
கொழுந்து கொரைஞ்சதுன்னு
அறுவா எடுத்ததில்லை
அடைமழையும் பார்த்ததில்லை
அரும்பு கொரைஞ்சதுன்னு
அரைபேரு போட்டார்கள்...!

பாலும் அடுப்பிலே பாலகனும் தொட்டிலிலே
பாலகனை பெத்தெடுத்த பாண்டியரும் முள்ளுகுத்த
வேலைக்கு பிந்தினேன்னா வெரட்டுவார் கங்காணி
தூங்கடா என் மகனே என் துயரை பாடிவரேன்...

அடி அளந்து வீடு கட்ட – நம்ம
ஆண்டமனை அங்கிருந்த
பஞ்சம் பொழைப்பதற்கு
பாறகடலை தாண்டி வந்தோம் – பஞ்சம் பொழச்சு நாம
பட்டணம் போய்ச் சேரலையே
கப்பல் கடந்து கடல் தாண்டி இங்கே வந்தோம்
காலம் செழிச்சு நம்காணி போய்ச் சேரலியே...!

மலையக நாட்டார் பாடல்களில் மலையக சூழலில் தமிழ் நாட்டுப் பெண்கள் பட்ட துயரினை வெளிப்படுத்தும் பாடல்களும் அமைந்துள்ளன. அதற்கு மேற்குறிப்பிட்ட தாலாட்டு பாடலே சான்று. அதாவது தென்னிந்தியாவில் நிலம், தோட்டம் எல்லாம் இருந்தும் பஞ்சம் பிழைக்க இலங்கை வந்து பின் திரும்பி தாயகம் செல்ல வழியில்லாமல் தத்தளித்தமையினை வெளிப்படுத்துகின்றது.

மலையக வாய்மொழி பாடல்களில் தொழிற்பாடல்களும் உள்ளடக்கப்படுகின்றன. தமிழகத்தில் உழவு, நெசவுத் தொழிலில் ஈடுபட்டவர்கள் பாடிய பாட்டுகளில் வழிவந்தவையாகவே மலையக நாட்டார் பாடல்கள் காணப்படுகின்றன. ஆனால் புதிய இடம், சூழல், தொழில் முறை என இப்பாடல்கள் மாற்றம் அடைந்தன. உழவு நெசவு செய்த தொழிலாளர்களின் பாத்திரங்கள் கொழுந்து கொய்பவர்கள், முல்லு குத்துபவர்கள், கான் வெட்டுபவர்கள், கவ்வாத்து வெட்டுபவர்கள், உரம் போடுபவர்கள் என மாற்றமடைந்து மலையக வாய்மொழி பாடல்கள் மகிழ்வு பெற்றன. அந்த வகையில் கீழ்வரும் தொழிற்பாடல்களை நாம் எடுத்து நோக்கலாம்.

"கோணகோண மலையேறி
கோப்பிபழம் பறிக்கையிலே
ஒருபழம் தப்பிச்சின்னு
உதைச்சானையா சின்னதொர

கூணி அடிச்ச மல
கோப்பி கண்ணு போட்ட மல
அண்ணனை தொலைச்ச மல
அந்தோ தெரியுதடி"

எண்ணிகுழி வெட்டி
இடுப்பொடிஞ்சு நிற்கையில
வெட்டு வெட்டு என்கிறானே
வேலையெத்த கங்காணி

இவ்தொழில் வாய்மொழி பாடலின் மூலம் கங்காணி முக்கிய இடம் வகிக்கின்றார். என்பது தெரிய வருகின்றது.

மலையக தொழில் பாடல்களில் கங்காணி குறிப்பாக பெரிய கங்காணி சிறப்பிடம் பெறுகின்றனர். அத்தோடு கும்பி பாடல்களில் கூட கங்காணி கும்மி என்ற வகையில் உள்ளதாக "மலையகம் வளர்த்த தமிழ்" என்ற நூலில் நாட்டார் பாடலை பற்றி கூறும்போது எழுத்தாளர் திரு. சாரல்நாடன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். பெரிய கங்காணி ஆதரவற்ற மலைத்தோட்ட மக்களுக்கு பாதுகாப்பையும் தலைமைத்துவத்தினையும் வழங்கியதாகவும் கங்காணிக்கு தொழிலாளர்கள் போலவே ஆங்கில அறிவு இல்லாமல் இருந்ததாகவும் அவர்களின் ஆங்கிலம் பரீட்சயத்துக்கு அமைய சில நாட்டார் பாடல்கள் அமைந்துள்ளன என கூறப்படுகின்றது. அந்த வகையில் அதற்குச் சான்றாகின்றது கீழ்வரும் பாடல்.

“சின்ன சின்ன நண்டு சேர்
கோயிங் டு த பைப் சேர்
நோ கமிங் தண்ணி சேர்
நாளைக்கு ரெண்டு ஆளு போடுங்க சேர்”

மேலும் வரட்சி மிகுந்ததால் கடல் கடந்து பிரதேசம் சென்றவன் மீண்டும் விவசாயம் செய்வதற்கு மழைக் காலத்தில் விவசாயம் செய்வதற்கு வருவான் என்று எதிர்பார்த்து காத்திருக்கும் தமிழக . பெண்களும் அவன் தந்த வாக்குறுதி படி அவனால் வர முடியாமையையும் கீழ்வரும் பாடல் தெளிவு படுத்துகின்றது.

“எழுமிச்சம் பழம் போல
இருபேரும் ஒரு வயது
யாரு செய்த தீவினையோ
ஆளுக்கொரு தேசமானோம்

ஊரான ஊரிழந்தேன்
ஒத்த பனை தோப்பிழந்தேன்
பேரான கண்டியில
பெத்த தாய நா மறந்தேன்.,,

மலையக பெண்ணினத்தின் சமூகம் ஆண் சமூகத்தில் தங்கியிருந்தது. அண் இறந்த பின் ஏற்படும் இழப்பு அப்பெண்ணை பெரிதும் தாக்குகின்றது. இவ்வாறு இருந்து உறவினர்கள் மீது பாடும் பாடல் ஒப்பாரி எனப்படும். இது தாலாட்டைப் போலவே தமிழக பெண்களின் படைப்பு என்கிறார் “நா. வானமலை ” அவர்கள். இவ்வொப்பாரி வாய்மொழி பாட்டுக்கு சான்றாய் அமைந்த பாடல்களுள் ஒன்று.

“எட்டுப்பேர் சேவகரும்
எலங்கைக்கு போனதில
எட்டுப்போர் வந்ததென்ன — நீங்க
எலங்கையில மாண்டதென்ன...”

என்ற பாடலாகும்.

மலையக வாய்மொழி பாடல்கள் தென்னிந்தியர்களின் உன்னதமான படைப்பு. இலங்கையில் குடியேரியோர் அடிக்கடி இந்தியா சென்று பழைய ஆளாக திரும்பி வரும்போது நாட்டார் பாடல்களில் அவர்களின் அனுபவமும் கலந்து புது உருமாற்றம் நிகழ்ந்தன. கிராமிய விவசாயிகளாக இருந்தோர் கூலிகளாக மாறி சொந்த ஊரை உறவினர்களை விட்டு கடல் வந்து தேசத்துக்கு சென்றதால் ஏற்பட்ட சோகமும் மலையக வாய்மொழி பாடல்களில் சிறப்பியல்புகள் ஆகும். இவை மலையக மக்களின் வரலாற்று சான்றுதல் மட்டுமல்ல. அவர்களின் கனவுகளும் கூட என “போராசிரியர் சைலாசபதி” அவர்கள் கூறுகின்றார்.

மேற்கூறியவற்றினை தொகுத்து நோக்கும்போது மலையக வாய்மொழி பாடல்களானது நூற்றிருபதாண்டு காலமாக நான்கு தலைமுறையாக இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தென்னிந்திய வம்சாவழியினர்களின் வாழ்க்கை பின்னணியினை வரலாற்று சமூக அமைப்பின் உண்மைகளை தெளிவு படுத்துவதாக அமைந்துள்ளது. அச்சில் பதித்து மனனம் செய்யா இவ்வாய்மொழி பாடல்களை மலையக இலக்கியத்தை பட்டை தீட்டுகின்றது. தென்னிந்திய இலக்கிய சிற்பிகளான மலைவாழ் மக்கள் தங்கள் எண்ணத்தை செதுக்கி வடித்த அதிசிறந்த அதிசய சிற்பம் வாய்மொழி பாடல்கள் என்றால் அது மிகையாகாது.

*கு.சுகுனா*
*மாணவி*
*2003ம் கல்வியாண்டு*

# பாடங்களை படிப்பித்தவர்களும் படிப்பிக்கின்றவர்களும்

## Tamil

| | |
|---|---|
| Mr. K. Vinayagamoorthy | LL.B (Col.), A.A.L |
| Mr. K. Arivalagan | B.A (Rea.) University of Peradeniya. |
| Mr. K. Kanagaraj | B.A (Rea.) University of Peradeniya. |
| Mr. K. Karunanithy | B.A (Rea.) University of Colombo. |
| Mr. S. Wilson | Dip in Teac. |
| Mr. K. Nadaraj | B.A. |
| Mr. F. Dominiyan Mark | B.A (Rea.) University of Peradeniya. |
| Mr. V. Yogaraj | B.A (Rea.) University of Peradeniya. |

## Political Science

| | |
|---|---|
| Mr. K. Vinayagamoorthy | LL.B (Col.), A.A.L |
| Mr. Rajmohan | B.A (Hon) Sp. in P.Sc. |
| Mr. A. Kanagaratnam | B.Sc (Rea.) Srijayawardanapura. |
| Mr. N. Satheeswaran | |
| Mr. F. Stanly Kumar | B.A (Rea.) University of Peradeniya. |
| Mr. F. Dominiyan Mark | B.A (Rea.) University of Peradeniya. |

## Geography

| | |
|---|---|
| Mr. P. Singaratnam | B.A.(Hon),M.A,Dip in Ed. |
| Mr. R.M. Sivananthan | B.B.A.(Rea.) University of Colombo. |
| Mr. K. Karunanithy | B.A.(Rea.) University of Colombo. |

## Hinduculture

| | |
|---|---|
| Mr. K.Arivalagan | B.A (Rea.) University of Peradeniya. |
| Mr. Srigaran | B.A (Rea.) University of Peradeniya. |

# ஒளி பிறந்தது

"பாக்கியம் எழுந்திரு, எழுந்திரு ஐந்தரை மணியாச்சு" என்று கட்டலில் படுத்தவாறு சண்முகம் தனது மனைவியை எழுப்பினான்.

பாக்கியம் மிக கஷ்டத்துடன் தான் படுத்திருந்த தலையணையின் அடியிலிருந்த தீ பெட்டியை எடுத்தவாறு சமயலறை பக்கமாகச் சென்றாள்.

"சுருக்கா தேத்தண்ணி ஊத்து. நேத்தே பெரட்டுக்கு போகலுன்னு கொழுந்துக்கு போட்டானுங்க" என சண்முகம் கட்டிலில் படுத்தவாறே பாக்கியத்திடம் கூறினான்.

சண்முகம், பாக்கியம் இருவரும் தேயிலை தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளிகள். சண்முகம் தனது குடும்பத்தின்மீது அக்கறையற்றவன். தன் பிள்ளைகளின் எதிர்காலத்தைக்கூட நினைக்காதவன். கிடைக்கும் பணத்தில் தனது சொந்த செலவினை மேற்கொள்வதுடன் குடி பழக்கமும் உடையவன்.

தனம் இதற்கு முரணானவள். தனது பிள்ளைகள் படித்து நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்று நினைப்பவள். இதன் பயனாக ராதிகா என்ற பெண் பிள்ளை பதினொராம் வகுப்பு வரை படித்துவிட்டு ஆடை தொழிற்சாலையொன்றில் வேலை செய்கின்றாள். இரண்டாவது பிள்ளை ராஜா. இவன் எட்டாம் வகுப்பில் படிக்கின்றான். இவன் தனது வீட்டு நிலையினை நினைத்து நன்றாக படிப்பவன்.

பிரட்டுக்கு போய் வந்த சண்முகம் "சுருக்கா ரொட்டியை சுடு, இன்னைக்கு குழி குத்த போகனும். வெல்லனா போனா நூத்தியம்பது குழி வெட்டிட்டு வந்துடலாம்" என்று ரொட்டியை எதிர்ப்பார்த்தவனாய் பாக்கியத்திடம் கூறினான்.

"நேத்து பேஞ்ச மழைநாள வீடெல்லாம் ஒழுகுதுங்க.., அந்திக்கு தலைவருகிட்ட சொல்லி சீட்டு வாங்கி போடுங்க" என்று கூறி பாழடைந்த சிப்ப தட்டில் ரொட்டியை போட்டாள் பாக்கியம்.

> மேலும் கதைத்தால் பிரச்சினை வரும் என்பதனை அறிந்த பாக்கியம் காலை சாப்பாட்டினை கூட சாப்பிடாமல் கணவன் இட்ட படங்கினை இடுப்பில் சுற்றியவளாய் வேலைக்கு புறப்பட்டுச் சென்றாள்.

"சரி, சரி அதை நான் சொல்லி வாங்கிறேன்". என்று ரொட்டியை சாப்பிட்டவனாய் தன் பக்கத்தில் அமர்ந்திருந்த மகன் ராஜாவை நோக்கி "ராஜா இன்னைக்கு வீட்டில இருந்து எனக்கு தேத்தண்ணி கொண்டா, நேத்து தேத்தண்ணி ஆறி இருந்தது. இன்னைக்கு மழைவேற பேயிது" என்றான்.

பக்கத்தில் அமர்ந்திருந்த ராஜா "இன்னைக்கு எங்களுக்கு டெஸ்ட் அப்பா .........!" என்றான்.

"என்னடா டெஸ்ட், ஸ்கூல்ல என்னா படிச்சு கிலிக்கிறிங்க வேலைதானே செய்யறீங்க. இன்னைக்கு போவாட்டி பரவால்ல.. ஒன்பது மணிக்கு ஐந்தாம் நம்பருக்கு தேத்தண்ணி கொண்டுகிட்டு வா." என்றான்.

பாக்கியம் அவனை மறுப்பவளாய் "இன்னைக்கு டெஸ்டுன்னு சொல்லுரான்தானே. அவன் ஸ்கூல் போகட்டும் ராதிகாவை சரி வீட்டில நிப்பாட்டுறேன்" என்றாள்.

"என்ன ராதிகாவை நிப்பாட்டுரியா? அவ போகட்டும் ஒரு நாளைக்கு போகாட்டி நூத்தைம்பது ருபாவை வெட்டிடுவானுங்க. வெட்டினா வர மாசம் சம்பளம் இருக்காது. அதுனால.. ராதிகா போகட்டும், இவன் இருக்கட்டும்." என்றான்.

மேலும் கதைத்தால் பிரச்சினை வரும் என்பதனை அறிந்த பாக்கியம் காலை சாப்பாட்டினை கூட சாப்பிடாமல் கண்கள் இட்ட படங்கினை இடுப்பில் சுற்றியவளாய் வேலைக்கு புறப்பட்டுச் சென்றாள்.

ஒன்பது மணியாகியது. ராஜா தேனீர் ஊத்திக்கொண்டு சண்முகம் வேலை செய்யும் இடத்துக்கு போனான்.

தூரத்தில் ராஜா வருவதை அறிந்த சண்முகம் மழை காரணமாக தலையில் கட்டியிருந்த ரெட்டினை சிறிது விலக்கி தனது பக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த கோவிந்தனைப் பார்த்து "கோவிந் வாடா தேத்தண்ணி குடிப்போம்" என்று கூறியவாறு கையில் இருந்த மண்வெட்டியினை நிலத்தில் வைத்துவிட்டு பாதைக்கு ஏறினான்.

ராஜாவின் கையிலிருந்த தேனீர் போத்தலை வாங்கிக் கொண்டு "வீட்டில காஞ்ச வெரகு இல்ல. நாலாம் நம்பருக்கு போய்.. காஞ்ச ஒடி கொஞ்சம் தேடிகிட்டு போ. நான் போத்தலை கொண்டு வாரேன்" என்றான்.

பக்கத்தில் இருந்த முருங்கை மரத்தில் சாய்ந்தவாறு கோவிந்தன் சண்முகத்தின் கையில் இருந்த தேனீர் போத்தலை வாங்கி இருவரும் மாறி மாறி குடித்தார்கள்.

திடீரென்று கோவிந்தன் சண்முகத்தை நோக்கி "ஏண்டா சண்முகம் உன் மகன் ஸ்கூலுக்கு போகலியா" என்று கேட்டான்.

"இல்லடா, நான்தான் நிப்பாட்டினேன். வீட்டில காஞ்ச வெரகு இல்ல அதனால வெரகு வெட்ட நிப்பாட்டினேன்." என்றான்

"ஆமா ஸ்கூல்ல என்னதான் படிச்சு குடுக்குறாங்க. நேத்துதான் கஞ்சுமுட்டி மகனை கொழும்புக்கு அனுப்பி வச்சேன். மாதம் இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளம். நல்ல வேலை என்று கூறியபடி.. வேலைக்கு இன்னொரு ஆள் வேனும் உங்க மகனை அனுப்புரியா சொல்லு" என்றான்.

சண்முகம் தேனீர் போத்தலை கையில் வைத்தவாறு யோசித்தபடி "வீட்டில்தான் கேட்கனும்" என்றான்.

"வேல ஒன்னுமில்ல மாத்தியா மகன ஸ்கூலுக்கு கூட்டிகிட்டு போயிட்டு கூட்டிகிட்டு வர வேலதான்.. மாசம் மூவாயிரம் ரூபா சம்பளம் தருவாங்க" என்றான் கோவிந்தன்.

பணம் என்றால் பிணமும் வாயை திறக்கும் என்பார்கள் அதனை நியாயப்படுத்துபவனாக "சரி" என்று ஒப்புக்கொண்டான்.

மாலையாகியது ராஜா படித்துக் கொண்டிருந்தான். சண்முகம் கட்டிலில் படுத்தபடி வானொலி பெட்டியில் பாட்டினைக் கேட்டுக் கொண்டிருந்தான். பாக்கியம் சமையல் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்னங்க காலையில் தேத்தண்ணி குடிக்க சீனி இல்லை, கடைக்கு போய் சீனி நூறு வாங்கிக்கிட்டு வாங்கவேன்." என்றாள்.

"ராஜாவை போய் வாங்கிக்கிட்டு வரச் சொல்லு, நான் படுத்திருக்கேன்." என்றான். "இல்லைங்க அவன் படிக்கிறான்." "என்னா படிக்கிறானா?.. அவன் நாளைக்கு கொழும்புக்கு வேலைக்கு போகப் போறான்" என்றான்.

இடியோசைக் கேட்ட நாகம் போல பாக்கியம் திடுக்கிட்டு "என்னாங்க படிக்கிறவன வேலைக்கு அனுப்புரீங்களா" "ஆமா அவன் என்ன படிச்சு கிழிச்சுப்புடப் போறான், நம்ப என்னா வேலைக்காரனுங்க புள்ளையா படிச்ச உடனே ஒப்பீசுல வேலை செய்ய, நம்ப ஒழைச்சாதான் நம்பலுக்கு காசு. படிச்சவன் பாட்ட கெடுத்தானா.. எழுதுனவன் ஏட்ட கெடுத்தானா.." என்றான்.

"இல்லப்பா.. தம்பி படிக்கட்டும், அவன் நல்லா படிக்கிறான். அவன் படிச்சு நல்ல வேலைக்கு போவான். நம்ம மூன்று பேருதான் இப்ப வேலை செய்யரோமே.. இப்ப அவன் எதுக்கு வேலைக்கு" என்று கூறினாள்.

"ஏய் நீ நிப்பாட்டு.. நீ சாடிக்கேத்த மூடிதான் போடுவ.. அவன் கொழும்புக்கு போகட்டும், நாளைக்கு வேன் எடுத்துகிட்டு வாரங்களா" என்றான் சண்முகம்.

பாக்கியத்தின் கண்களில் கண்ணீர் கரை புறண்டது. அன்று முழுநாளும் அழுதபடியே காணப்பட்டாள்.

அடுத்த நாள் பத்து மணியளவில் வேன் வந்தது. ராஜாவை அதில் ஏற்றிக்கொண்டு போனார்கள். கோவிந்தன் வேனில் வந்தவர்களிடம் ஆயிரம் ரூபா பணத்தை வாங்கி சண்முகத்திடம் கொடுத்தான். சண்முகம் அப்பணத்தில் அரைவாசியை வீட்டில் கொடுத்தவிட்டு மீதியை தனது செலவுக்கு எடுத்துக்கொண்டான்.

பாக்கியமும் ராதியாவும் மிகவும் சோகத்துடன் இரு கிழமையினை போக்கினர். மூன்று மாதங்கள் ஓடியது. சண்முகம் அத்தோட்ட கரப்பந்தாட்ட மைதானத்தின் முன் நின்று இளைஞர்கள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சண்முகத்தை நோக்கி மிக விரைவாக ஓடி வந்து பாலு என்பவன் "சண்முகம் உனக்கு டெலிபோன் வந்திருக்கு. பொலிசுக்கு வரச்சொல்லி, ஏன்னு தெரியல. ஒனக்கு மட்டமல்ல ராமையா, ராமதாஸ், சுப்பிரமணியம் இன்னும் ரொம்ப பேருக்கு" என்றான்.

இதைக் கேட்ட சண்முகம் சிந்தித்தவாறு தோட்டத் தலைவரின் வீட்டுக்குப்போய் விடயத்தை சொல்லிக் கொண்டிருக்கும்போது ராமையா என்பவன் வந்து அதே விடயத்தை கூறினான். "சரி நாளைக்கு போவோம்" என்றான் தலைவர்.

மறுநாள் மிகப்பெரிய குழுவாக பொலிசுக்கு சென்றார்கள். அங்கு சென்ற பிறகுதான் தெரியவந்தது பதினான்கு வயதிற்கு குறைந்த தனது பிள்ளைகளை வேலைக்கு அமர்த்திய குற்றத்திற்காக... இன்று நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி ஆறு மாதம் காவல் தண்டனை அல்லது இருபத்தையாயிரம் ரூபாய் அபராதம் என கூறப்பட்டது. சண்முகம் பிழையினை ஒப்புக்கொண்டு ஆறு மாத காவல் தண்டனையை ஏற்றுக்கொண்டான். ஏனையவர்களும் தண்டனையை ஒப்புக்கொண்டார்கள்.

சி.புஷ்பராஜ்
*மாணவன்*
*2003ம் கல்வியாண்டு*

# கலைப்பிரிவிலிருந்து பல்கலைக்கழகம் தெரிவானவர்கள் (1996 - 2002)

| | | | |
|---|---|---|---|
| *1996* | Mr.K. Nadaraj | B.A | *(University of Peradeniya)* |
| | Mr.R. Mahendran | B.A | *(Loyala College - India)* |
| | Miss.B. Logeshwary | B.A | *(University of Peradeniya)* |
| | Miss.R. Vijekumary | B.A | *(University of Peradeniya)* |
| | Miss.G. Vinothini | B.B.A | *(University of Colombo)* |
| | Mr. Peris | B.A | *(Bharathidasan University - India)* |
| *1997* | Mr.S. Ratnajothi | B.A (Rea.) | *(University of Colombo)* |
| | Miss.A. Rajeshwary | B.A (Rea.) | *(University of Colombo)* |
| | Miss.S. Vinithajini | B.A (Rea.) | *(University of Colombo)* |
| | Miss.J. Yalini | B.A (Rea.) | *(University of Colombo)* |
| *1998* | Miss.K. Subashini | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| | Mr.K. Karunanithy | B.A (Rea.) | *(University of Colombo)* |
| | Mr.G. Saravanan | B.Sc (Rea.) | *(University of Srijeyapura)* |
| | Miss.V. Kavitha | B.B.A (Rea.) | *(University of Colombo)* |
| | Miss.S. Sobha | B.Com (Rea.) | *(University of Colombo)* |
| | Miss. Kalyani | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| | Mr. Poobalan | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| *1999* | Mr.T. Kanagaraj | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| | Mr.M. Godwin | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| | Mr.F. StanlyKumar | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| | Mr.P. PremKumar | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| *2000* | Miss. Vijitha | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| | Miss. Chithra | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| | Miss.S. Umadevi | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| | Miss. Dharshini | B.A (Rea.) | *(Queens Mary College - India)* |
| *2001* | Mr.F. Dominiyanmark | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| | Mr.V. Yogaraj | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| *2002* | Miss.L.Esther | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| | Miss.V.Kalpana | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| | Mr.B.Sivaharan | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| | Mr.Logeshwaran | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| | Mr.Sridharan | B.A (Rea.) | *(University of Peradeniya)* |
| | Miss.Jeyasathya | B.A (Rea.) | *(University of Peradeniya)* |

# யுத்தம் ஒரு யுகம் ஒரு.

**கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட கவிதை**

அனாதைகள் இல்லமென்றும்
விதவைகள் விடுதியென்றும்
காணாமற் போனோருக்காய்
காத்திருப்பவர்களென்றும்
அகதி அலைபவரென்றும்
அந்நிய நாட்டில்
இடம் தேடுபவரென்றும்
அக்கா கற்பழிக்கப்பட்டாளென்றும்
அண்ணன் கொலை செய்யப்பட்டானென்றும்
ஆங்காங்கே செய்திகள்
அச்சுகளில் ஏறுகின்றது.
நமக்கோ இன்னும் அச்சம்தான்
கூடுகின்றது.

வீதி சாவடிகள்
எல்லைக்கு ஒன்றிருக்க
விளையாட்டுப் பந்தாய்
வெடி குண்டு கையிலிருக்க
எத்தனையோ நாளிகையாய்
எங்க சனம் பட்டினியிருக்க
எப்பவரும் சமாதானம்
என்றிருக்கோம் நாங்களய்யா?

யுத்தத்தின் கோரப்பிடியில்
இரத்தத்தை சிந்தி நிற்கும்
எங்களது மனித குலம்
வீடுவாசல் இழந்து – இன்று
வீதியிலே நிற்குதப்பா..
வேண்டாம் யுத்தமென்று
வேதனையில் துடிக்குதப்பா.......!

ஓ .. மனிதா...
கருவறையில் கருத்தரித்த
மனித உயிர்களை
அழிக்கும் உரிமை
ஆண்டவனுக்கு மட்டும்தானே
மண்ணுக்குள் புதைய போகும் – நீ
ஏன் அதைப் பறிக்கின்றாய்?

அற்றிலும் ........

சுடுகாட்டு ஓநாய்களின் ஓலங்கள்
பிணவாடையின் சன்னிதானத்திலே
மனித குடியிருப்புகள் .....
பிணங்களுக்கு மத்தியில்
பிணமாய் போன மனித வாழ்க்கை
பயப்பட்டே வாழ பழகிக்கொண்ட
புதிய மனித சமுதாயத்தில் உருவாக்கம்
ம் ...........!
என்ன செய்வது
அழிவுகளை யோசிக்கும்
மனிதராசி ......
அகிலத்தை மறந்து போனதே .....!
உரிமைக்கான போராட்டத்தில்
உண்மையை .....
ஏற்க மறந்ததே.

துப்பாக்கியோடு நேசம் கொண்ட
மனிதம்....
மனித அழிவுகளை
விளைவாக்கிக் கொண்டிருக்கின்றது.
என்ன செய்வது .....
சமாதானம் என்ற சரித்திரத்தின்
கதவுகள் அடைக்கப்பட்டு
காலாவதியாகிவிட்டது.

மனித உணர்வுகளும்
உரிமைகளும் புதைக்கப்பட்டு விட்டன.
வக்கிரகங்களும் வன்முறைகளும்
தலைதூக்கி
துப்பாக்கி சூடுகளும்

விஞ்ஞானம் ..... விஞ்ஞானம்
இயந்திர வாழ்க்கை வாழும் – உனக்கு
அழிவுகள் பற்றிய அச்சமில்லை
அணுகுண்டுகளையும்
பீரங்கிகளையும்
ஏவுகணைகளையுமே...
நேசித்து இயந்திரமாகி போன
உனக்கு
மனித
உணர்வுகளும் உரிமைகளும்
எங்கே
புரியப்போகின்றது.

இனத்துக்காக இலங்கையிலும்
இடத்துக்காக இஸ்ரேலிலும்
சமரில் சண்டையிட்டு
பல.... சவக்குழிகள் தோன்றியதாய்
வன்முறைக் காவியங்கள்
வந்து விட்டனவே .....!

போதிமர நிழலில் – புத்தனும்
அகிம்சையாய் – காந்தியும்
அன்பாய் – இயேசுவும்
அழகாய் – அல்லாவும்
வாழ்ந்து காட்டிய
வாழ்கின்ற அர்த்தங்கள்
எங்கோ மறைந்து விட்டதாய்
எங்கள் சமுதாயத்தில்
ஏதேதோ சர்ச்சைகள்........

ஆகவே
கோவில்கள் ராம....ராம.... ஓசையும்
விகாரைகளின் புத்தங் சரனங் ஓசையும்
சர்ச்சிகளில் மாதா பிதா கீதமும்
பள்ளிகளின் குறான் ஓதுகையும்
வைகரை பொழுதிலே
வரிசையாய் நடந்திட
ஒற்றுமை புனைவோமா?

மனிதா....
இதுவரை கண்டவை வேதனை
இனி நாம் செய்வோம்
ஒரு சாதனை
மனிதம் மகிழ்ச்சி பெற
அதர்மம் தாழ்ச்சி பெற ........
அகிம்சை உயர்ச்சி பெற .......

எனவே.....
இனியோர் விதி செய்வோம்
இனங்கள் ஒன்றாய் சேர
இளையோர் ஒன்று சேர்ந்து
'யுகம் மாற யுத்தம் மாற'
இனியோர் விதி செய்வோமா....?

இளையோர் ஒன்று சேர்ந்து
கடையில் சில இனவாதிகளுக்கு
இயந்திர தாகம் தனியுங்கள்
இயற்கை இராகம் பாட
புதியதோர் உலகம் செய்ய
போரை – விட்டு
யுகம் மாற
யுத்தம் மாற
உங்களது மதியால்
புதியதோர் விதி செய்யுங்கள் – இப்பூமியிலே
புதியதோர் விதி செய்யுங்கள்
அப்போதுதான் எங்கோ........ என்றோ....
தூரத்தே போன எங்கள்
விடியலல் வெளிச்சம்
கிட்டும்.

*மாணவி*
*2003ம் கல்வியாண்டு*

**சி.கவிதா**

## தமிழ் பாடத்தில் அதிவிசேட (A) சித்தி பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| 1996 | Miss.G.Vinothini | (St.Gabrials Balika M.V) |
| 1997 | Mr.S.Wilson | (Norwood T.M.V) |
| | Mr.S.Ratnajothi | (Highlands C.C) |
| | Miss.M.Bawany | (Highlands C.C) |
| | Miss.S.Rajeshwary | (Kotagala T.M.V) |
| 1998 | Mr.G.Saravanan | (St.Jhon Bosco's College) |
| | Miss.S.Sobha | (St.Gabrial Balika M.V) |
| 2000 | Miss.S.Prashanthini | (Highlands C.C.H.) |

## அரசறிவியல் பாடத்தில் அதிவிசேட (A) சித்தி பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| 1998 | Miss.K.Subashini | (Highlands C.C) |
| 1999 | Mr.T.Kanagaraj | (Talawakelle T.M.V) |
| | Mr.P.PremKumar | (Highlands C.C) |
| | Mr.V.Lowrance | (Highlands C.C) |
| 2000 | Mr.N.Satheeswaran | (Highlands C.C) |
| 2001 | Mr.V.Yogaraj | (Kotagala T.M.V) |
| | Miss.Chithra Devi | (Anfield T.V) |
| | Miss.G.Kohilavani | (Highlands C.C) |
| 2002 | Mr.Sivaharan | (Highlands C.C) |
| | Mr. SureshKumar | (Talawakelle T.M.V) |
| | Miss. Srithayalini | (Dimbulla T.M.V) |

## சமகால பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள்

| BATCH | TAMIL | POLITICAL SCIENCE |
|---|---|---|
| 2003 | S. Dharshini<br>A. Sivakumar | S. Arulvany |
| 2004 | S. Thiyagaraj | S. Sujitha |

| | |
|---|---|
| S. Selvakumar. | No: 42/10 Nurshing Home Rd., Hatton. T.P : 051-23168 |
| K. Kanageswaran. | No: 14/6, Station Rd., Watagoda. T.P : 051-36077 |
| M. Dayas Kumar. | No: 03, High Forest, Kandapola. T.P : 052-86278 |
| S. Sabapathy. | Argule Division, Kotagala. |
| S. Pushparaj. | Mocha U.D, Maskeliya. |
| V. Yogeswaran. | Drayton (D.T), Kotagala. T.P : 051-22503 |
| R. Sasitharan. | Forest Creek Est., Patana. |
| S. Sivakumar. | Faithlea Est., Patana |
| S. Kumar Raj. | Invery Est., Dickoya. |
| V. Sivanes. | Stameord Hill Div., Annfield Estate, Dickoya. |
| A. Sivakumar. | Tillyrie Estate, Dickoya. |
| M. Ravi. | L.D.K Div., Hatton. |
| S. Prasath. | Hapugastenne L.D., Maskeliya. |
| S. Kirubanandaraja. | Castlreagh, Hatton. |
| R. Theebaraj. | Yathanside, Kotagala. |
| V. Vincent. | No: 69, Upcot Rd., Maskeliya. T.P : 052-77258 |
| K. Kalaichelvan. | Gartmore Est., Maskeliya. |
| P. Gnanasegar. | Norton Div., Norton Bridge. |
| A. Sivakumar. | Castleragh Est., Hatton. |
| S. Yogeswaran. | Lonach Group, Benachie Div., Watawala. |
| M. Vimal. | Drayton (K.O) Div., Kotagala. |
| S. Ramakrishnan. | Ingestre L.D., Dickoya. |
| R. Vidya. | Ingestre Group, Dickoya. |

| | |
|---|---|
| M. Theenathayalan. | Carfax Est., Hatton. |
| B. Niroshan. | CP/AM/ Bloomfield T.V, Maskeliya. |
| S. Vallymail. | Kadawala, Watawala. |
| S. Rathiga. | No: 79, Main Street, Hatton. |
| S. Sivaruby. | No: 10, Main Street, Agrapatana. |
| F. Magrat Mary. | No: 9, Samanellawelly, Norton. |
| K. Vanitha. | Fruitill Est., Hatton. |
| S. Sharmila Dharshini. | Nanuoya Div., Talawakelle. |
| A. Matilda. | No: 2, Renukas, Dimbulla Rd., Hatton. |
| J. Sathiyapriya. | Strathdon Est., Hatton. |
| R. Krishnadevi. | Shannon 50 Acares, Abbotseligh, Hatton. |
| R. Stella. | Small Drayton, Kotagala. |
| S. VijayaKumar. | Castlereagh, Hatton. |
| R. Vany. | North Maddeccombra (N.D), Watagoda. |
| M. Thilagambihai. | North Maddeccombra (N.D), Watagoda. |
| R. Premalatha. | Adamspeak Div., Mocha Estate., Maskeliya. |
| N. Yogeswary. | Mocha L.D., Maskeliya. |
| S. Arulvany. | No: 2/6 Mocha Est., Maskeliya. |
| S. Kavitha. | No: 170, Bus Stand Rd., Maskeliya. T.P : 052-77153 |
| L. Lalithakala. | Luccomb Bazaar., Maskeliya. |
| S. Pradeepa. | Samanelawela Scheme, Norton Bridge. |
| R. Vathsala. | No: 55, Lower Bazaar, Punduloya. |
| K. [illegible]andrawathany. | No: 99, Lower Bazaar, Punduloya. T.P : 051-33080 |
| M. [illegible]sha. | No: 200/11, Holyrood, Talawakelle. |

| | |
|---|---|
| S. Kalaimany. | Derry Clare, Kotagala. T.P : 051-23428 |
| K. Rubawathy. | Small Drayton, Kotagala. |
| S. Jayamalar. | Small Drayton, Kotagala. |
| S. Umamageswary. | Small Drayton, Kotagala. |
| S. Dharshini. | Carla Beck, Nanu-Oya. |
| M. Sridevi. | Small Drayton, Kotagala. |
| K. Punithambigai. | Kandapola Div., Kandapola. |
| S. Dhusyanthiny. | Kandapola Div., Kandapola. |
| P. Mathiwathany. | No: 7, Lochile Housing Scheme, Kotagala. |
| F. Jesurany. | Drayton K.O., Kotagala. |
| N. Krishanthy. | No: 6, Vishnupura, Kotagala. |
| K. Dayalanthiny. | No: 30, Main Street, Agrapatana. T.P : 051-30297 |
| G. Yogabawany. | Castlereagh Div., Hatton. |
| R. Sivaneja. | Lindulla T.V., Lindulla. |
| M. Nishanthini. | No: 11, Samanellawalry, Norton. |
| T. Dhariny. | Drayton T.V., Kotagala. |
| V. Atputhamery. | Castlereagh Div., Hatton. |
| M. Bavany. | Carfax Div., Hatton. |
| K. Rameswary. | Killarney Est., Bogawantalawa. |
| K. Logeswary. | Glenanore S.P., Haputala. |
| F. Farzana. | No: 9/6, Jayanthy Mawatha, Talawakelle. |
| T. Sesena. | No: 200/22, Holyrood, Talawakelle. |
| R. Thilagawathy. | Forest Creek, Patana. |
| K. Umadevi. | Forest Creek, Patana. |

| | |
|---|---|
| M. Prabukala. | K.G.K Div., Yullie Field, Hatton. |
| A. Chitradevi. | Fruithill Est., Hatton. |
| S. Regenamary. | Strathdon Est., Hatton. |

## A/L 2003 Arts (Repeat Class)

| | |
|---|---|
| Kandasamy Sivaruban. | Yathanside Est., Kotagala. |
| Periyathamby Sasitharan. | Lochiel Estate, Kotagala. |
| Dharmalingam Prabagaran. | Hadley Div., Dickoya. |
| Poobalan Umachandran. | Castlereagh, Hatton. |
| Sivanantham Prabananthan. | Labookelle H.D., Labukelle. |
| Arokiyasamy Alosiyas. | Faithlie Div., Patana. |
| Hameed Jamaldeen. | Lochile Est., Kotagala. |
| Visuwasam. | Craigielea Fres creek Div., Patana. |
| P.K. Shanmuganathan. | Dickoya Div., Dickoya. |
| Shanmugam Vijeyaletchumy. | Danbar Div., Dickoya. |
| Aravan Pushparaj. | Stonyclief Group, Tabrabane Div.,Kotagala. |
| P. Ponnambalam Sathiyavani. | No: 139, main Street, Kotagala. |
| K. Karuppiah Pushpalatha. | Panmur Div., Hatton. |
| P. Mookiyah Sarmila. | Abbotseleagh Est., Hatton. |
| Selladurai Pushpa Dorina. | Children Development Officer, Gikiyanakande, Neboda. |
| Patkunan Manimegalai. | No: 40, Harington Colony, Kotagala. |
| M.K. Raju Jeyanthan. | Small Drayton, Kotagala. |
| P. Ratnam Puranalingam. | Drayton (K.O), Kotagala. T.P : 051-24808 |
| S.M. Chettiiyar Krishanthan. | No: 11/3, Rosita Town, Kotagala. T.P : 051-23191 |
| Sellasamy Prabath | Adamspeak Div., Mocha Estate, Maskeliya. |
| Thawamany Roobiny. | Osborne Est., (LD) Hatton. |
| Velu Valliyammai. | Shannon Div.,Hatton. |
| R. Mayalahoo Kalpana. | Invery Est., Dickoya. |
| Subramaniyam Rajeswary. | Castlereagh Div., Osborne Group, Hatton. |
| Michel Lushiyamary. | Castlereagh Div., Hatton. |
| Lathisar Annamma. | Shannon Est.,Hatton. |
| [illegible]imuthu Kalaiyarasi. | Dickoya Est., Dickoya. |

# A/L 2004 Arts

| | |
|---|---|
| R. Rajagobal Dinusha. | New Land, Pothupitiya Rd., Rakwana. |
| T. Malayappan Priya. | Palmerston Est., Talawakelle. |
| K. Rengaraj Abiramy. | Mafield Est., Hatton. |
| K. Karuppiah Vasugi. | Craiglie Est., Patana. |
| Ramasamy Umamageswary. | Small Drayton, Kotagala. |
| S. Kavitha. | No: 51/1, Mendes Mawatha,Hatton. |
| Jayaram Ajantha. | No: 50, Kotmale Rd., Talawakelle. |
| R. Rajanayagam Rajamalar. | No: 90/6 B, Dumburugiriya Rd., Hatton. |
| S. Palaniyandy Selvakumary. | Shannon 50 Acares, Hatton. |
| Veeraiya Thamaraiselvy. | Yathanside, Kotagala. |
| Kandasamy Nishanthy. | Adams Peak Div., Mocha Est., Maskeliya. |
| Veeraiya Thamaraiselvy, | Yathanside Est., Hatton. |
| Thangaraj Jeyasubananthini. | St.Clair Estate, Talawakelle. |
| M. Sellamuthu Selvaloshini. | Rath Div., Holyrood Estate, Talawakelle. |
| R.K. Ratnasamy. | Emelina Div., Maskeliya. |
| S. Anthonysamy Jasinthamary. | Kincora Div., Upcot Post. |
| Sarojini Sivasamy. | Rahanviatte Est., Lindulla. |
| R.S. Velu Kamaleswary. | Adamspeak Div., Mocha S.P., Maskeliya. |
| N. Rubini. | No: 21, Ariyagama Fruitihill,Hatton.T.P : 051-24106 |

| | |
|---|---|
| P. Aarthy Prabaharan. | No: 2, Suba Fancy,Station Rd., Haputala. |
| P. Suppiah Swarnasri Barathy. | Kelliwatte Est., Patana. |
| B. Vinoosha. | No: 18/A, Dumbirigiriya Rd., Hatton.<br>T.P : 051-22140 |
| T. Damayanthy. | Drayton K.O. Div., Kotagala. |
| R. Kunjamuthiriyan Krishanthini. | Elbeddg L.D, Bogawantalawa. |
| V. Dilans Kumary. | No: 44, New Velleygama, Norwood. |
| R. Jeyarani. | No: 199/22, Dubirigiriya Road, Hatton. |
| P. Rengasamy (K.P) | Wooton Estate (B), Kotagala. |
| V. Sivabalan Sivadharshini. | Anfield Estate, Dickoya. |
| M. Menaha. | No: 174, Upcot Rd., Maskeliya. |
| Thangavel Vimaleswary. | Beavice Est., Idulgashinna. |
| A. Puspamary. | No: 135, Post Office Rd., Maskeliya. |
| Selliah Pradeepa. | M.H.S. Stores, Thotulagala S.P., Haputala. |
| R. Ponnambalam Narmada. | Talankanda Est., Lindula. |
| B. Roshel Aruna. | No: 1, Kuda-Oya, Hatton. T.P : 051-23452 |
| P. Kathireshan Shanthini. | Yuille Field K.G.K. Div., Hatton. |
| Tania Anne Gomez. | No: 90/5, Dumbirigiriya Rd., Danbar,Hatton.<br>T.P : 077-835032 |
| Suppiah Sujitha | No: 266/3, Panawatta Rd., Garagoda.<br>Yatiyantota. T.P : 036-66996 |
| R. Sinniah Selvadharshini. | Mocha Group, Adams Peak Div., Maskeliya. |
| V. Kanniyanathan. | Drayton K.O., Kotagala. |

| | |
|---|---|
| G. Perumal Jeyaluxmy. | No: 22, Rosita Est., Kotagala. |
| I. Kanchna. | Strathaon Div., Hatton. |
| K. Govindaraj Malathy. | Carfax Div., Hatton. |
| Subramaniyam Thiyagaraj. | Invery Est., Dickoya. |
| K. Maruthamuthu Thamilvanan. | North Punduloya (U.D), Punduloya. |
| G. Ramesh Kumar. | No: 61/9, Bathiya Pura, Kotagala. |
| S. Loganathan Dinesh. | No: 163, Patana Bazaar, Patana. |
| M. Krishna Prasath. | No: 5, Station Rd., Kotagala. |
| Ganeshon Panchalingam. | Valamalay Div., Laxapana Estate,Maskeliya. |
| Varatharaj Paul Antony. | Invery Est., Dickoya. T.P : 051-24252 |
| V. Kandasamy Sobanaraj. | Yathanside, Kotagala. |
| P. Rajagobal Ravichandran. | North Punduloya (U.D), Punduloya. |
| P. Johnson Anthony. | Chrystlers Farm, Kotagala. |
| M. Arumugam Jeyaratnam. | Valadolid Div., Mora Estate, Maskeliya. |
| K. Krishnamoorthy. | No: 4/10, Chrystlers Farm, Kotagala. |
| S.M. Balasegaram Muthukumar. | Craigielea Est., Patana. |
| V. Pushparaj Karunagaran. | Craigielea Est., Patana. |
| M. Charles. | No: 234/1, Hatton Rd., Watawala. |
| Ragavan Thanapathy. | Drayton (K.O) Div., Kotagala. |
| Duraisamy Yogaraj. | No: 7A, Castlereagh Div., Hatton.<br>T.P : 0777-436917 |
| K. Nishan. | No: 3, Main Street, Norton Bridge. |

| | |
|---|---|
| A. Vello Ramesh. | Mount Vernon L.D., Patana. |
| S. Navaneethan Balasubramaniyam. | Bambarakelly Factory, Lindulla, T.P: 072-685887 |
| S. Ramajayam Sudagar. | Castlereagh Est., Hatton. |
| Manickam Yogaraj. | Castlereagh, Osborne Group, Hatton. |
| Alagarsamy Ramadas. | Norton Div., Osborne Estate, Hatton. |
| Jeyaraman Radhakrishnan. | Elbedde Lower Div., Bogawantalawa. |
| B. Niroshini. | No: 66, Dunbar Rd., Hatton. |
| K. Ramyah Kishwakanth. | Yathanside (U.D), Kotagal. |
| S. Shanmuganathan Mohanraja. | Small Drayton, Kotagala. |
| K. Sathumany. | Pinnawala T.N., Pinnawala, Blangoda. |
| Nallan Yogeswary. | Strathadon Est., Hatton. |
| Pakiyanathan Kalaichelvi. | Castlereagh Div., Osborne Group, Hatton. |
| Vasuthavan Yogeswary. | Castlereagh Div.,Osborne Group, Hatton. |
| Rajendran Swarna. | Castlereagh Div., Osborne Group, Hatton. |
| J. Dharani. | Errol Div., Hatton. |

# என்றென்றும் நன்றியுடன்

நாங்கள் கடந்து வந்த பாதைகளை திரும்பி பார்க்கையில் பல அர்த்தங்கள் புலப்பட்டன. அந்த அர்த்தங்களை கோவைப் படுத்தி அச்சிடும்போது பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அச்சிரமங்களை சிறிதாக்கி பல துறைகளிலும் அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி ஒத்துழைப்பு நல்கிய நல் உள்ளங்களுக்கு நாங்கள் என்றும் நன்றிகளை காணிக்கையாக்கின்றோம்.

தனி ஒரு மனிதனாக நின்று உயிரோட்டமுள்ள ஒரு சமுதாயத்தினை உருவாக்கிக் கொண்டு வாழ்வின் அர்த்தங்களை வெளிக்காட்டி, முளைத்த செடிகளுக்கும் இன்றும் நீருற்றிக்கொண்டு, சங்கத் தமிழ் மன்றத்தின் உயிர் மூச்சாக திகழும் சங்கத் தமிழ் மன்ற பொறுப்பாசிரியர் மரியாதைக்குரிய க. விநாயகமூர்த்தி அவர்களுக்கும்,

கல்வியகத்தின் இயக்கத்துக்கு மூலவேராக அமைந்த இஸ்தாபகர் திரு. பொ. சிங்கரத்ணம் அவர்களுக்கும்,

இன்று இக்கல்வியகத்தினை இடையூரின்றி அசயற்படுத்தி வரும் கல்வியக இயக்குனர் திரு. சு. சாரங்கனுக்கும்,

சங்கத் தமிழ் மன்றத்தினை தன்கையால் முன்னெடுத்துச் சென்று தலைமை வகிக்கும் சங்கத் தமிழ் மன்ற தலைவர் செ. செல்வகுமாருக்கும்,

இதயபூர்வமாக இந்நூலின் தோற்றத்திற்கு முழுமையாக பங்காற்றிய இதழாசிரியருக்கும்,

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் போட்டிகளுக்கு தலைப்புகளை தந்துதவி திருத்தங்களையும் மேற்கொண்ட மலையகத்தின் முன்னணி இலக்கிய கர்த்தாக்கலான திரு. சாரல்நாடன், திரு. மல்லிகை சி.குமார், திரு. மொழிவரதன் ஆகியோர்களுக்கும்,

1996 முதல் 2004 வரை கல்வி கற்ற / கற்றுக்கொண்டிருக்கின்ற மாணவர்கள் சார்பாக அவர்களின் கருத்தோவியங்களினை எழுத்தோவியங்களாக வரைந்த ஒவ்வொருவருக்கும்,

எழுத்து வேலைகளை நேர்த்தியாக செவ்வனே செய்து தந்த மாணவர்களுக்கும்,

இன் நிகழ்வின் சிறப்பிற்கு சிறப்பான நிகழ்ச்சிகளை தந்துதவிய மாணவர்களுக்கும்,

இந்நூல் வெளியீட்டுக்கு மூலகாரணமாய் அமைந்தது மட்டுமன்றி விமர்சனத்தையும் செய்துதவிய ஆசிரியர் திரு.க. நடராஜ் அவர்களுக்கும்,

நூலின் கடைசிப் பக்கத்தை தன் கருத்துப்படைப்பால் அழகு படைத்த கவிஞர்

கணினி வடிவமைப்புகளை நேர்த்தியாக தந்த LCS நிறுவனத்தினருக்கும் குறிப்பாக இரா.பிரபாகர் மற்றும் மொ.நிசாம்டீன் அவர்களுக்கும்,

இதழச்சிப்பதிப்பினை விரைவாகவும் நேர்த்தியாகவும் செய்து தந்த **Loyal Publications** நிறுவனத்தார் திரு. தர்மகுலராஜா அவர்களுக்கும்,

உள்ளடக்கத்திற்கு உருவம் கற்பித்து அட்டைப்படம் வடிவமைத்த ஆசிரியர் லியோ ஜெபராஜா அவர்களுக்கும்,

இந்நூல் வெளியீட்டுக்கு மூலகாரணமாய் அமைந்து எங்களை உற்சாகப்படுத்தி பொருள், மற்றும் பொருளாதார சிக்கல்களை போக்கிய நல்லுள்ளம் படைத்த அன்பர்களுக்கும்,

இந்நூல் வெளியீட்டுக்கு அனுசரணையாக இருந்து நிதி மற்றும் ஆலோசனைகளை வழங்கிய 2003ம் கல்வியாண்டு மாணவர்களுக்கும்,

பண உதவிகளோடு எழுத்து வேலைகளையும் நேர்த்தியாக எழுதித் தந்த 2004ம் கல்வியாண்டு மாணவர்களுக்கும், சங்கத் தமிழ் மன்றத்தின் அனைத்து கடமைகளையும் பொறுப்புடனும் அக்கறையுடனும் மேற்கொண்ட சங்கத் தமிழ் மன்ற உறுப்பினர்களுக்கும்,

எம்மை பாராட்டி எம் முயற்சிகளினை ஊக்குவித்து அனைத்து விடயங்களிலும் உதவி நல்கிய லோயல் மற்றும் LCS நிறுவனத்தார்களுக்கும்,

இந்நூல் வெளியீட்டுக்கு களம் அமைத்துக் கொடுத்த அதிபர் திரு. S.அண்ணாசாமி அவர்களுக்கும்,

நூல் வெளியீட்டு விழாவிற்கு பல்வேறு வகையில் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் தந்துதவிய அன்பர்களுக்கும், மற்றும் பெயர் குறிப்பிட முடியாத அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியினை மனமுவந்து சமர்ப்பிக்கின்றோம்.

*நா. சதீஸ்வரன்.*
செயலாளர்.
நிகழ்ச்சி ஏற்பாட்டுக்குழு.

# அசோக வனத்தை நேசிக்கிறோம் !

சீதை மட்டுமா
இங்கு
கொண்டு வரப்பட்டாள்
நாங்களும்தான்!

சீதையை மீட்க
ராமன் வந்தான்
எங்களை மீட்க
ராமனுஜம் வந்தான்.

எங்களின்
பாதியை மீட்ட
ராமனுஜத்தால்
ஏன் மீதியை
மீட்க முடியவில்லை?

கடவுச் சீட்டின்
கடைசித் தேதிப்படி
நாங்கள் என்றோ
காலாவதியான ஜென்மங்கள்

கப்பலே ஓடாதபோதுத
கடலைத் தாண்டவில்லை
என்ற குத்தலுக்கு ஆளான
குற்றவாளிகள்..

தண்டனையாய்
எங்களுள் பலருக்கு
வேலை நிறுத்தப்பட்டு
பட்டினியே
விநியோகிக்கப்படுகின்றது.

கடல் நீரை
காணும் முன்னே
கையிறுப்பை எல்லாம்
கரைத்துவிட்டு நிற்குமிவர்கள்...

இடுப்புச் சேலையும்
உரியப்பட்ட
பாஞ்சாலியாய்
ஆக்கப்பட்டுவிட்டார்கள்
இவர்களைக்
காக்க வேண்டிய
கண்ணர்கள் கூட
கையைக் கட்டியவாறு
அந்த கௌரவர்களுக்கு பின்னால்
கர்ணனாய்
நிற்கின்றார்கள்.

இந்த கர்ணன்களால்
ஈட்டில் இருக்கும்
எங்களின்
கடவுச் சீட்டைக் கூட
மீட்டுத்தர முடியாதே
பின் என்....?

புஸ்பக விமானமும்
சில பொற்காடுகளும்
தயாராய் இருக்கிறது
என தண்டாராம்
போடுகினாறார்கள்!

வேண்டாம் – எங்களுக்கு
அயோத்தி வேண்டாம்.
இந்த நாட்டிற்கு
விசுவாசமாய் இருப்போம்
என சத்தியம் செய்ய
ஆசைப்பட்டு

நாங்களும் ஒரு காலம்
மனு போட்டோம்
ஆனால்
நிராகரிக்கப்பட்டு விட்டோமே
இருந்தும்
இந்த மண்ணை
நேசிக்கின்றோம்.

எங்களின் கால்கள்
இந்த மண்ணிலேயே
வேர் பிடிக்க
ஆரம்பித்து விட்டன.
இந்த
அசோக வனத்திலேயே
நாங்கள் கால்ளை
ஊன்றிக் கொள்கின்றோம்.

அந்த
அயோத்திக்குப் போய்
அந்த
ராமர்கள் முன்னால்
எங்களால்
தீக்குளிக்க முடியாது.

மல்லிகை சி.குமார்

புள்ளியளவும் பொய்யில்லை !
தேக்காட்டு மாந்தரின் இயலாமை மிகு
துயரப் புலம்பல்கள் வடிந்து முடிய
வடிகாலமைக்கிறது லோயலகம்.

தன் வீறுமிக நடையை
முட்பாதைகளில் தொடங்கிய இதன்
கல்வியெனும் மொத்த இலக்கிற்கான
செங்கம்பளச் சாலைகளை, மிகையாய்க்
கடந்தது கலைத்துறை தானென்பது
தமிழ் கண்ட வெற்றி !

கலை வளர்க்க நிகழ்த்தியச் சமரில்
வெற்றி கண்ட வீரர் பெயர்களும், படைப்புகளும்
மூத்த மாணவரின் ஆசான் மீதான
பார்வைகளும் பரிணமிக்கின்றன.

பல சாதிப்புகளுக்குச் சாதனமாய் உழைத்து
ஆசானொருவரின் இடைவிலகலின்
நினைவாக ஜனிக்கும் இப்பேழை
சிறு கால இடைவெளியில் இப்பள்ளி தனதாக்கி
வியத்தகை மிகு சாதனைத்
தகடுகளின் கோர்ப்பதாகத் தெரிகின்றது.

-கவிஞர் தினகரன் -